விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 166 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை (02.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இந்தியாவில் கைதானவர்கள் மதத் தீவிரவாதிகள் இல்லை
### போதைக்கு அடிமையானவர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் நால்வரும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள். மதத் தீவிரவாதிகள் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித் துள்ளார்.

இது குறித்து முழுமையான விசா 19

## ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குக முன்னணியின் பிரசாரம் தொடங்கியது

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலை புறக் கணிக்கக் கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் நேற்று யாழ்ப் பாணம் மத்திய பேருந்து நிலையத் தில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப் பட்டது.

நேற்று மாலை மூன்று மணியள வில் குறித்த துண்டுப்பிர சுரங்கள் விநியோகிக்கப் 19



# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துக
## ஆசிய பிராந்திய தேசிய மனித உரிமைகள் அமைப்பு அரசாங்கத்திடம் பரிந்துரை

ASIA PACIFIC FORUM
ADVANCING HUMAN RIGHTS IN OUR REGION
National human rights institutions

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் சுயாதீனத்துவத்தை உறுதிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசியல மைப்புக்கான 20ஆவது திருத்தத்தை நீக்கி 19ஆவது திருத்தத்தை உள்வாங்குமாறும் ஆசியப் பிராந்தியத்தின் தேசிய மனித உரிமைகள் அமைப்புக்களின் இயங்குகை அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி
### வணிகப்பிரிவில் யாழில் முதலிடம்



யாழ்.மாவட்டத்தில் வணிகப்பிரிவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி பத்மலோகன் கீர்த்திகா முதலிடம் பெற்றுள்ளார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பணம் அச்சிடப்படமாட்டாது
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பணம் அச்சிடப்பட மாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

"இளைஞர் பேச்சு நாளைய இலங் கையின் இளம் தலைவர்கள்" என்ற 19



## துப்பாக்கி வெடித்ததில் இளைஞன் உயிரிழப்பு
### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட துணுக்காய் கல்விளான் பகுதியில் உடைமையில் வைத்திருந்த நாட்டுத்துப்பாக்கி வெடித்ததில் சம்பவ இடத்தி லேயே இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் 19

## குடும்பப் பெண் ஒருவர் வீதியில் தீ மூட்டி எரிப்பு
### யாழ்ப்பாணத்தில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி வீதிப் பகுதி யில் குடும்பப் பெண்ணை அழைத்து வந்த நபர் ஒருவர் குறித்த பெண்ணை தீ மூட்டி கொளுத்தியதால் அப்பகுதி யில் பதற்ற நிலை ஏற்பட்டது. நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரியை சேர்ந்த மூன்று 19

## கிருமித் தொற்று புலோலியில் குடும்பப் பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

கிருமித் தொற்றுக் காரண மாக குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்த 19

### எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும்
## பஸ், முச்சக்கரவண்டி கட்டணத்தில் மாற்றமில்லை

(கொழும்பு)

எரிபொருள் விலை குறைக் கப்பட்டாலும் பஸ், முச்சக்கர வண்டி கட்டணத்தில் மாற்ற மில்லை என அறிவிக்கப்பட் டுள்ளது.

எரிபொருள் விலை குறைக் கப்பட்ட போதிலும், பஸ் கட் டணங்களில் மாற்றம் ஏற்படுத் தப்பட மாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒரு லீற்றர் டீசல் விலை 307 ரூபாயை 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நுணாவில் சாவகச்சேரியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு சூழ உள்ள பகுதி
- A9 வீதியில் இருந்து மட்டுவில் செல்லும் றோட் இலுப்பையடி வீதி அரசன் கடை அருகாமை
- பலன் தரும் மரங்கள் உண்டு
- தரகர் தேவையில்லை

(1046)

தொடர்புகளுக்கு:
**070 497 4565, 070 420 7343**

## மணமகன் தேவை

1984ல் பிறந்த அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் கணக்காளராக பணியாற்றும் மகளுக்கு பெற்றோர் கிறிஸ்தவ மண மகனை தேடுகின்றனர். (1055)

**077 541 3139**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல அச்சக நிறுவனத்திற்கு Graphic designer, Receptionist வேலை யாட்கள் தேவை. யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (1049)

**076 192 3444**
**077 482 1912**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

**Deutsch - ஜேர்மனி, சுவிஸ்**
செல்வோர்க்கான A1, A2 and B1 வகுப்புக்கள்
**N.Thenuja, T.Nanthan**

**IELTS - லண்டன்(UK), கனடா**
IELTS life skill A1 வகுப்புக்கள்
**S.Kubenthiny, JP.Siththiran**
சிவன் கோவிலுக்கு முன்பாக Station Road Chunnakam (1057)
**077 729 1307, 077 374 3404**

## காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோயில் முன்புறமாக 200m தூரத்தில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. சுற்றுமதில், கிணறு, தென்னைமரங்கள் உள்ளன.
தொடர்புகளுக்கு: (1051)
**077 002 2251, 077 759 0799, 077 720 7097**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 44 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடிப் பாதை (18)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

(1046)

**(குரு) 077 029 4164, 077 329 4130, 077 294 1521**

## தென்னிந்திய தலயாத்திரை

**30 ஆலயங்கள் தரிசனம் செய்ய முடியும்**

**12 நாட்கள்**

### கட்டணத்தில் உள்ளடங்குபவை

- விமானப்பயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- தேநீர்/ பழச்சாறு
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- நுழைவுக்கட்டணம் (சிறப்புத்தரிசனம்)
- சுற்றுலா மேலாளர்
- நினைவுப் பரிசில்

(1031)

தொடர்புகளுக்கு : **077 711 4828**
**BOHAR TRAVELS Bohar International (Pvt) Ltd**
**510, பருத்தித்துறை வீதி, நல்லூர்**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 13 . 09 . 1940

மறைவு 03 . 05 . 2024

கடந்த 03.05.2024 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் வேலாயுதம் புனிதவதி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 31.05.2024 அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 02.06.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடரந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும் (1087)

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்
076 636 3378
இங்ஙனம்
குடும்பத்தினர்

Government TVEC Approved

## தாதியர் பயிற்சிப்பாடசாலை FLORENCE NIGHHTINGAL

## தாதியர் பயிற்சிநெறி - 2024

### நுழைவுத் தகைமை

- க.பொ.த.சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் & A/L
- விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
- பயிற்சிக்கால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்
- மற்றும் இலகுவான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்



### கற்கை நிலையங்கள்

❖ மருதனார்மடம் ❖ நெல்லியடி ❖ சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்

VIBER 077 718 6438
WHATSAPP 077 482 4473
T.P.NO 077 718 6438

நிர்வாகம்
புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப் பாடசாலை. (1052)

## உளமார வாழ்த்துகின்றோம்

**19 ஆம் ஆண்டு அகவை பூர்த்தியாகி 20 ஆம் அகவையில் காலடி பதிக்கும் யாழ். மின்சார நிலைய வீதி,**

### இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

(உரிமையாளர் – என்.நித்தியானந்தன்)
021 222 6953, 077 722 5310
**அவர்களை சிறப்புற உளமார வாழ்த்துகின்றோம்.**
**இன்று போல் என்றும் எல்லோரும் போற்றிட, நல்லோர் வாழ்த்திட, நல்லதே செய்து நன்றே நிகழ்ந்திட, நல் வாழ்த்துக்கள்!**



(1058)

வாழ்த்துபவர் : திரு.இ.ஸ்ரீதரன்,
வேணுகா ரவல்ஸ், நாச்சிமார் கோவிலடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L தொழினுட்பப்பிரிவு

# Techna
Technical Institute

**A/L 2023(2024) உயர்தரப் பரீட்சையில் மிகச்சிறந்த பெறுபேறுகளை பெற்ற எமது மாணவர்களை**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்



ந.கிஷாந்தி A 2B மாவட்ட நிலை - 06
சி.ஹர்னி 2A C மாவட்ட நிலை - 07
க.ஜக்சிகா 2A C மாவட்ட நிலை - 08
ந.றஜோலினி A 2B மாவட்ட நிலை - 12
த.கிருபாலினி A B C மாவட்ட நிலை - 14
நா.அபிசா 2B C மாவட்ட நிலை - 15
ச.நிதுசா A 2B மாவட்ட நிலை - 17
பி. அபிராம் B 2C மாவட்ட நிலை - 22




கே.நிதுஷா A 2B மாவட்ட நிலை - 29
சி.சிந்துஜன் B 2C மாவட்ட நிலை - 30
த.வனிதா A 2C மாவட்ட நிலை - 31
ற.அபிஷா B 2C மாவட்ட நிலை - 32
ப.பேபிகா B C S மாவட்ட நிலை - 36
சி.சௌமியா B C S மாவட்ட நிலை - 37
க.டனுசா 3C மாவட்ட நிலை - 38
வ.கபிஷாளினி B 2C மாவட்ட நிலை - 38



றெ.நிஷர்மி 3C மாவட்ட நிலை - 41
ரா. பாதுஷா 3C மாவட்ட நிலை - 43
சி.கபிநயா 3C மாவட்ட நிலை - 47
ஜெ.நிதர்ஷனா 3C மாவட்ட நிலை - 50

### பொறியியல் தொழினுட்பவியல்



வி.சதுர்சன் A B C மாவட்ட நிலை - 07
ச.அஜிலக்சன் 2C S மாவட்ட நிலை - 05

(சி-504)

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்



கொ.டெல்சிகன் மா.நிலை - 05 2C S
கு.திசானுஜன் மா.நிலை - 10 A 2B
யோ.வினுஜன் மா.நிலை - 10 3B
யோ.திருசன் மா.நிலை - 15 A B C
யூ.றொ. டினோஜன் மா.நிலை - 18 2B C
ற.நிலக்சன் மா.நிலை - 20 3C
அ.லக்சன் மா.நிலை - 27 B 2C
சி.பலராம் மா.நிலை - 30 A 2C



வி.அஜய் மா.நிலை - 36 3C
ர. பிரசாந்த் மா.நிலை - 37 B 2C
பி.திவிஸ்ரன் மா.நிலை - 39 B 2C
அ.சாமுவேல் மா.நிலை - 40 3C
வி.கம்சி மா.நிலை - 49 3C
ம. சிலக்சன் மா.நிலை - 50 B 2C
அ.டினுசன் மா.நிலை - 54 2C S
மு.மாதங்கி மா.நிலை - 58 B 2C

## A/L 2023 REPEAT BATCH ஆரம்பம்
02.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு

## A/L 2026 புதிய பிரிவு ஆரம்பம் - பிரிவு 02
03.06.2024 திங்கட்கிழமை மாலை 3.30மணிக்கு

# 077 170 3549
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
ஆய்வுகூட வசதிகளுடனான செயன்முறை வகுப்புக்கள்
பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
களப்பயணங்களை மேற்கொள்ளல்.
இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி-20 உலகக் கோப்பை அமெரிக்காவில் இன்று ஆரம்பம்

9 ஆவது 20 ஓவர் உலகக் கோப்பை போட்டியை வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்கா இணைந்து நடத்துகின்றன.

இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறும் இந்த 20 ஓவர் கிரிக்கெட் திருவிழாவில் இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ், பாகிஸ்தான், நியூசிலாந்து உட்பட 20 அணிகள் பங்கேற்கின்றன.

இதில் அமெரிக்கா, உகாண்டா, கனடா ஆகிய குட்டி அணிகள் 20 ஓவர் உலகக் கோப்பையில் முதல்முறையாக அடி யெடுத்து வைக்கின்றன.

அணிகள் ஏ, பி, சி, டி என 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிக ளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் ரொப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்-8 சுற்றுக்கு தகுதி பெறும்.

சூப்பர் 8 சுற்றுக்கு வரும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் தலா ஒரு முறை மோதும். இதன் முடிவில் இரு பிரிவிலும் ரொப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதி முன்னே றும்.

வெஸ்ட் இண்டீசில் 6 மைதானங்களில் இறுதிப்போட்டி உட்பட 39 ஆட்டங்களும், அமெரிக்காவில் 3 மைதானங்களில் 16 ஆட்டங்களும் நடக்கின்றன. அமெரிக்காவில் உலகக் கோப்பை போட்டி அரங்கேறுவது இதுவே முதல் முறையாகும்.

தொடக்க நாளில் புதுமுக அணிகளான அமெரிக்காவும், கனடாவும் டல்லாஸ் நகரில் உள்ள கிராண்ட்பிரார் ஸ்டேடியத்தில் மோதுகின்றன. (ரி-6)





## வீடு விற்பனைக்கு

புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய 1¾ பரப்பு வீடு விற்பனைக்கு உண்டு.

◈ விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(1063)

தொடர்புகளுக்கு: 076 116 3919

## விற்பனைக்கு

உழவு இயந்திரம் TAFE 45DI

ஒரு கை பாவிப்பிலுள்ள உழவுஇயந்திரம் (RH...) விற்பனைக்கு உண்டு 950 மணித்தியாலங்கள் மட்டும் ஓடியது.

தொடர்பு (1056)

077 575 0882

## விற்பனை / வாடகை

பாவித்த பனைத் தீராந்தி சிலாகைகள் விற்பனைக்கு உண்டு. விலை அடி 150/= எல்லா அளவுகளிலும் (2x2, 4x3) பாலை, முதிரை, வேம்பு, தேக்கு உண்டு. மெசின் பெட்டியுடன் 1 மாத வாடகைக்கு உண்டு. 1 நாளைக்கு 1500/= (1061)

077 786 5637

## விற்பனைக்கு


யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 4 பரப்புக் காணியும், யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நமசிவாயம் பாடசாலைக்கு முன்பாக 5 பரப்பு சுற்றுமதில் கொண்ட காணியும், யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4 ½ பரப்புக் காணியும், யாழ்.மின்சார நிலைய வீதியில் தனிக்கடையும் விற்பனைக்கு.

- யாழ்.விக்ரோறியா வீதியில் 12 பரப்புக் காணி விலை 40 கோடி ரூபா.
- யாழ்.வைத்தியசாலை வீதியில் 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணி விலை 12 கோடி ரூபா.
- யாழ்.வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 04 பரப்புக் காணி விலை 10 கோடி ரூபா
- யாழ்.பிறவுண் வீதியில் 5 பரப்புக் காணி விலை 20 கோடி ரூபா
- யாழ்.தட்டார்தெருச் சந்திக்கு அண்மையில் 2½ பரப்புக் காணி விலை 3 கோடி ரூபா
- யாழ்.திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் 5 பரப்புக் காணி 7 ½ கோடி ரூபா.
- யாழ்.சென்ஜோன்ஸ் பாடசாலைக்கு அண்மையில் 6 பரப்புக் காணி 12 கோடி ரூபா.
- யாழ்.பெரியகோவிலுக்கு அண்மையில் குருசோ வீதியில் 6 பரப்புக் காணியில் 3 பெரிய வீட்டுடன் விலை 15 கோடி ரூபா.
- யாழ்.வைத்தியசாலை வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 10 குளியில் அமைந்த கடை விலை 10 கோடி ரூபா.
- ஏ9 நெடுஞ்சாலையில் ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக 100 பரப்பு காணி விலை 05 கோடி ரூபா
- மன்னார் நகருக்கு அண்மையில் நல்ல நிலையில் இயங்கி வரும் மில் விலை 25 கோடி ரூபா

தொடர்புகளுக்கு: 077 723 2535 (C-0505)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 19.07.1933



ஆண்டவன் அடியில் 30.04.2024

### அமரர் கனகசபை யதுகுலசிங்

(ஓய்வுபெற்ற உடற்கல்வி விரிவுரையாளர் – மணிமாஸ்டர்/ மணி அண்ணன்)

அன்னார் இறைபதமடைந்த செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள் நல்லூர் கொழும்புத்துறை கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளின் பழைய மாணவர்கள் மற்றும் எம் சக உத்தியோகத்தர்கள், விளையாட்டுத்துறை சார்ந்த அன்பர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள், தொலைபேசி மூலம், சமூக வலைத்தளங்கள் மூலம் தொடர்பு கொண்டு துக்கம் உசாவிய அன்பர்கள் உறவினர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் மற்றும் 31.05.2024 அன்று கீரிமலையில் நடைபெற்ற கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றிகள் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (02.06.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய உணவும் எமது இல்லத்தில் இடம்பெற இருப்பதால் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

186, பலாலி வீதி, கந்தர்மடம்.

(0088)

குடும்பத்தினர்
077 659 9078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதை இதய சத்திர சிகிச்சை நிபுணர் ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி இன்று பெற்றுக் கொள்வதையிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)

# எம் இதயத்தில் குடி இருக்கும் இதய சத்திர சிகிச்சை நிபுணர் காந்திஜி

இன்றைய நவீன மருத்துவ உலகில் கண்கண்ட தெய்வமாக இலங்கை மக்களால் போற்றக் கூடியவர் வைத்திய நிபுணர் காந்திஜி. இன்று மனிதநேயம் தொலைந்து மனிதத்துவம் அழிந்து உலகம் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா? என்று நாம் ஐயம் கொள்ளும் அளவிற்கு எல்லோர் இதயங்களிலும் வாழ்ந்து கொண்டு இருப்பவர் தான் காந்திஜி.

இன்று பணம் பணம் என்று பணத்திற்கு வைத்தியம் பார்க்கும் அளவிற்கு சுயநலமும் பொருள் மீதான ஆசையும் மனிதனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறானவர்கள் மத்தியில் மனிதநேயமும் மனிதப் பண்பும் நிறைந்த உத்தம மனிதனாக வைத்திய நிபுணர் காந்திஜியைக் காண்கின்றோம். இவரின் உயர்ந்த குணமும் அர்ப்பணிப்பும் வைத்தியத் தொழில் மீதான இடையறாத பரிவும் தான் இதற்குக்காரணம் ஆகும். இவரின் வைத்திய நிபுணத்துவமும் மாறிவரும் உலகிற்கேற்ப தன்னை இற்றைப்படுத்திக் கொள்ளும் ஆற்றலும் அபரிமிதமானது.

இன்று இலங்கையில் எத்தனையோ இதயசத்திர சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர். அவர்கள் தம்முடைய அறிவுக்கும் வாண்மைத்துவத்திற்கும் ஏற்ப உயிர்களைக்காப்பாற்றிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இருப்பினும் யாருடனும் ஒப்பிட்டுக்கூற முடியாத அளவிற்கு தன்னுடைய சேவையால் உயர்ந்து நிற்பவர் தான் வைத்திய நிபுணர் காந்திஜி.

மருத்துவர்களிற்கு அன்பும் சேவை மனப்பாங்கும் மிகவும் அவசியம். உயிர் பாதியில் துடித்துக்கொண்டிருக்கும் ஒரு நோயாளியைக் காணும் போதெல்லாம் மருத்துவரின் மனதில் அந்த உயிரை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டும் என்கிற நம்பிக்கை மனதில் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டிக்கொடுத்தாலும் இம்மருத்துவரின் சேவையை வேறு எதனுடனும் ஒப்பிட முடியாது. இந்த உலகில் தெய்வம் இல்லை என்று வாதிடுபவர்கள் கூட, மருத்துவரின் அளப்பரிய சேவையைக்கண்டு அவர் வடிவில் தெய்வத்தை கண்டதாகக் கூறுவாரும் உளர். அவ்வாறான இயல்புகளைக் கொண்டவர் தான் இருதய சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் காந்திஜி.

தெய்வங்கள் நேரடியாகப் பூமிக்கு வருவதில்லை. அன்பும் சேவையும் கருணையும் எந்த உள்ளத்தில் இருக்கின்றதோ அந்த மனிதனிடம் இறைவன் குடிகொள்கின்றான். எனவே இவை எல்லாம் ஒருங்கே கொண்டு நடமாடும் தெய்வமாக இதயசத்திர சிகிச்சை நிபுணர் காந்திஜியைக் காண்கின்றோம்.

இவர் மறுபிறவி தரும் கடவுள். ஏழை எளிய மக்களுக்கு மருத்துவம் பார்த்து அவர்களின் கண்ணீரைத்துடைத்தவர். இவரின் பேச்சில் கனிவும் கருணையும் நம்பிக்கையும் இருக்கும். மிக ஆபத்தில் இருந்த நோயாளிகள் கூட இவரின் கடைக் கண்பார்வையில் உயிர் பெற்றெழுவார். மருத்துவ உளவியல் நன்கு தெரிந்தவர்.

மனிதனின் ஆன்மாவின் ஆழத்தில் இறங்கி வைத்தியம் புரிபவர். தன்னை நம்பி வரும் நோயாளிகளின் உயிரை, வாதாடி வழக்குரைத்து காப்பாற்றித்தரக் கூடியவர் தான் வைத்தியர் நிபுணர் காந்திஜி. இவரின் பேச்சைக் கேட்ட மாத்திரத்தே நோயின் ஒரு பாதி எங்கோ மாய்ந்திடும்.

இவ்வாறு எத்தனையோ குணங்கள் கொண்ட அற்புத மனிதர், தியாகச் செம்மல் என்றெல்லாம் போற்றுமளவிற்கு தனது வைத்திய நிபுணத்துவத்தாலும் அர்ப்பணிப்பான சேவையாலும் பல உயிர்களைக்காத்து இன்று இலங்கையில் புகழ்பூத்த சிறந்த வைத்திய நிபுணராக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

இக்கலியுகத்தில் இவ்வாறான மனிதர்கள் வாழ்வதால் தான் இன்றும் இப்பூமி நிலைத்திருக்கின்றது. இத்தகையோர் போற்றப்பட வேண்டியவர்கள், கொண்டாடப்பட வேண்டியவர்கள் எம் இனத்தின் பெரும் சொத்துக்கள்.

இவரின் மிகப்பெரிய குணம் தனது சொந்த நாட்டில் இருந்து சேவை ஆற்றுவது. இன்று எத்தனையோ வைத்தியர்கள் இலங்கையில் படித்த பின் தமது சேவையை வெளிநாடுகளில் செய்கின்றார்கள். ஆனால் எமது வைத்தியர் தான் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசிக்கும் மக்கள் தொண்டனாக இன்றும் காசை ஒரு தூசென மதித்து சேவை செய்து வருகின்றார். இத்தகையவரின் சேவையை வடிக்க தமிழில் வரிகள் இல்லை.

இருப்பினும் இன்று இலங்கையில் இதய வைத்திய நிபுணர் ம.குருபரன், இதய வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன் ஆகியோரும் என்றும் எம் மக்களால் போற்றப்படுபவர்கள். இவர்களின் நோய் நிர்ணயம், வைத்திய நிபுணத்துவம் அறுவைச் சிகிச்சைக்கு பெரிதும் உதவியாக உள்ளது. இவர்கள் எந்த நேரத்திலும் நோயாளிகளின் நலன்கருதி சேவை யாற்றும் உத்தமர்கள். அதுவும் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் இவர்கள் இருவரும் இல்லை என்றால், இதய சிகிச்சைப்பிரிவின் நிலை கேள்விக்குறியாக இருக்கும். இவர்கள் மூவரும் இணைந்து இன்று எத்தனையோ மனிதர்களின் வாழ்வில் விதியை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களை எம் இதய அறைகளில் பூட்டி வைத்திருக்கின்றோம். வாழ்க இவர்கள் பணி. வளர்க இவர்கள் தொண்டு. எம் தேசமே எம் இனமே எம் இனத்தின் செல்வங்களைக் கொண்டாடுவோம்.

**திருமதி புஸ்பா நவரத்தினம்**
**(ஓய்வு நிலை ஆசிரியர்)**

# இராசிபலன்

02.06.2024
வைகாசி 20 , ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி பின்னிரவு -1.43 மணிவரை
ரேவதி பின்னிரவு -12.59 மணிவரை

சுபநேரம் -8.52-10.22 மணிவரை
இராகுகாலம்-4.22-5.52 மணிவரை
அமிர்த சித்தம், ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் - ஆயிலியம், மகம்.

**வளவன்**


மேஷம்

வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


கடகம்

விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர், புதிய முயற்சிகள் கைகூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.


துலாம்

சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், காரிய அனுகூலமுண்டு.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் இணக்கத்தோடு நடந்து கொள்வர், உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.


ரிஷபம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


சிம்மம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்


விருச்சிகம்

பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


கும்பம்

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.


மிதுனம்

மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் நம்பிக்கை கூடும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


தனுசு

நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


மீனம்

வழிபாடு ஆனந்தம் தரும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

தவிர்க்கப்படும் கடமை தன்னில் போடப்படும் கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்து மகளிர் மாணவி வணிகவியல் பிரிவில் முதலிடம்




(யாழ்ப்பாணம்)

வெளிவந்த 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வணிகவியல் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி கிர்த்திகா பத்மலோலன் யாழ். மாவட்டத்தில் முதல் இடம்பெற்று சாதனை படைத்துள்ளார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வணிகவியலில் முதலாம் நிலை மற்றும் கலைத் துறையில் ஐந்தாம் இடம் உட்பட 24 பேர் 3-ஏ சித்திகளையும், 18 பேர் 2-ஏ,பி சித்திகளையும், 6 பேர் 2-ஏ, சீ சித்திகளையும் பெற்றுள்ளனர். (நி-6)

## 1000 கிலோ நிறையுடைய காண்டாமணி திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு



(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு லண்டனில் இருந்து 1000 கிலோ நிறை கொண்ட காண்டாமணி நேற்று முன்தினம் எடுத்து வரப்பட்டது.

திருக்கோணேஸ்வரர் பெருமான் திருத்தலத்திற்கு 1000 கிலோ எடை கொண்ட காண்டாமணி லண்டன் வாழ் சைவ மக்களின் பங்களிப்புடன் வழங்கி வைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் வேண்டுகோளுக்கு அமையவும் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் அனுமதியுடனும் இக் கைங்கரியம் ஆரம்பிக்கப்பட்டது.

நவீன முறையில் மின்சாரத்தில் தானாக இயங்கும் வகையில் இந்த காண்டாமணி உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## கைதையூர் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி மக்கள் அனைவரும் இணைந்து எடுக்கும் கைதையூர்ப் பெருவிழா இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு கைதடி மத்திய விளையாட்டு மைதானத்தில் விழாக்குழுத் தலைவர் அ.கயுந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் ,யாழ் மாநகர சபையின் முதன்மைக் கணக்காளர் திருமதி. வசந்தமாலா மனோகரன், சாவகச்சேரி நகர சபையின் கணக்காளர் திருமதி. கார்த்திகாஜினி சிறிசனத், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் கதிர்காமநாதன் சந்திரகுமார் ; கௌரவ விருந்தினர்களாக சட்டத்தரணியும் ஓய்வுநிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய நாகலிங்கம் சத்தியநாதன், கிளிநொச்சியின் ஓய்வு நிலை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் வேதநாயகம் தபேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

முகிழம் விழா,கலாசார விழா,கல்வி மேம்பாடு, பண்பாட்டு விழா ,பிரதேச விளையாட்டு விழா ஆகியவற்றில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா நிகழ்வு நடைபெறும். (நி-6)



கீரிமலை கருகம்பனை அந்திராணை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கல் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

## நல்லைக்குமரன் 32 ஆவது மலர் ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சைவ சமய விவகாரக்குழுவின் 2024 ஆம் ஆண்டுக்கான நல்லைக் குமரன் 32 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

கட்டுரைகள் 5-7 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும். ஏற்கனவே நல்லைக் குமரன் மலரில் வெளிவந்த, வேறு நூல்களில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும். முடிவுத் திகதி : 02.07.2024 பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மின்னஞ்சல் முகவரி : saivasamayavivaharam@gmail.com ஆக்கங்களை மின்னஞ்சல் மூலம் / இறுவட்டுக்கள் மூலம் அனுப்புவது அவசியமாகும். மென் பிரதியாக அனுப்பப்படாத ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தங்களது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்படல் அவசியம்.

மேற்குறித்த நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லைக் குமரன் 32 ஆவது மலருக்கான ஆக்கங்களை பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு யாழ்.மாநகரசபையின் ஆணையாளரும்,சைவசமய விவகாரக்குழு தலைவருமான ச. கிருஷ்ணேந்திரன் அறிவித்துள்ளார். (நி-6)


## செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம்

(யாழ்ப்பாணம்)

இந்தியத் தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ் இந்திய துணைத்தூதரகமும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும் மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து வடமாகாணத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு இந்தியாவின் ஜெய்ப்பூரிலுள்ள பகவான் மகாவீர் விக்லாங் சஹாயட்ட சமித்தியினுடைய தொழில்நுட்ப உதவியுடன் வடக்கு மாகாணத்தில் இரண்டாவது தடவையாக செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம் ஒன்று எதிர்வரும் 04.06. 2024 - 19.06.2024 வரையான காலப்பகுதியில் திறன் விருத்தி நிலையம், பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் ஏற்கனவே பயனாளிகள் தெரிவு இடம் பெற்றுள்ளது. இருப்பினும் இப்பயனைப் பெற்றுக் கொள்வதற்கு தங்கள் விபரங்களை வழங்க தவறிய பயனாளிகள் அவர்களது பகுதியிலுள்ள சமூக சேவை உத்தியோகத்தரை உடன் தொடர்பு கொண்டு பயனைப் பெற்றுக் கொள்ளலாம். (நி-6-33)

## 102 வருடங்களின் பின் வவுனியா அல் இக்பால் மாணவிகள் சாதனை



(குருமன்காடு)

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட சூடுவெந்த புலவு அல் இக்பால் மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 102 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் வெளியாகி உள்ள 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் முதன்முறையாக இரு மாணவிகள் கலைப் பிரிவில் 3-ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். (நி-6-250)

## பொது நூலக எரிப்பின் நினைவேந்தல் நிகழ்வு




(யாழ்ப்பாணம்)

தென் கிழக்காசியாவின் மிகப் பெரிய நூலகமாக திகழ்ந்த யாழ்.பொது நூலக எரிப்பு இடம்பெற்று நேற்றுடன் 43 ஆவது ஆண்டுகள் கடந்துள்ள தனை நினைவு கூரும் நினைவேந்தல் யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில் யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகர் சிவகரன் அனுசியா, நூலக ஊழியர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது நூலகம் எரிக்கப்பட்டபோதும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகளின் போதும் உயிரிழந்தவர்களுக்காக சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய நூலகமான யாழ். பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி காடையர்களால் எரிக்கப்பட்டித்தது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 443
Viber 076 636 3378



# நீதிக்காக ஏங்கும் தமிழினம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்தது இன அழிப்பின் உச்சம் என்ற வலுவான ஆதாரங்கள் இருந்த போதிலும் தவறிழைத்தவர்களுக்கான தண்டனைகள் இன்று வரை வழங்கப்பட்டதாய் இல்லை.

மாறாக இறுதி யுத்தத்தில் போர்க்குற்ற மீறல்கள் எதுவும் நடக்கவில்லை என ஆட்சியாளர்கள் கூறி தவறிழைத்தவர்களுக்கு அரண் அமைக்கும் செயற்பாடு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

படையினரை காட்டிக் கொடுக்க மாட்டோம் என்பதே போர்க்குற்ற மீறல் தொடர்பில் தெற்கு அரசியல்வாதிகளின் நிலைப்பாடாக தொடர்ந்து இருந்து வருகிறது.

இவ்வாறு ஒரு பக்கச் சார்பாக நடந்து கொள்வது ஒரு நாளும் அறம் ஆகாது.

ஏனெனில் போரின் கொடுமையினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் நடந்த போர்க்குற்ற மீறல்கள் தொடர்பில் முறையான விசாரணை வேண்டும் என மேற்கத்தேய நாடுகள் பல கோரிக்கை விடுத்திருக்கும் நிலையில் அக்கோரிக்கைகளை உடன் நிராகரிக்கும் செயற்றிட்டத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துகிறதே தவிர பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுத் தர கொஞ்சமும் முயற்சிக்கவில்லை என்பதே உண்மை.

இறுதியுத்தம் நடைபெற்ற காலம் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம்.

பயங்கரவாதத்தை இலங்கையில் இருந்து முழுமையாக அழித்து விட்டோம் என ஆட்சியாளர்கள் கூறி மார்தட்டினதே தவிர அந்தப் போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்ற உண்மையை ஏற்கமறுத்தனர்.

மாறாக அந்நாளை வெற்றி விழா நாளாக பிரகடனப்படுத்தி பாற்சோறு உண்டு மகிழ்ந்தனர்.

ஒரு இனம் வதைபட்ட நாளை வெற்றி விழா நாளாக பிரகடனப்படுத்துவதற்குள் இருக்கும் இனவன்மத்தை தமிழ் மக்களும் சர்வதேசமும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்குப் பின் மூன்று ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்திருந்த போதிலும் தமிழ்மக்களுக்கான தீர்வு நின்ற இடத்திலேயே நிற்கிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்ற மீறல் தொடர்பான ஆவணப் படம் ஒன்று கடந்த 2013 ஆம் ஆண்டு நோஃபயர்ஸோன் என்ற பெயரில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டது.

போர்க்குற்ற மீறல்களையும் அப்பாவிப் பொதுமக்களின் பலி எடுப்புக்களையும் அவர்கள் போரினால் பட்ட பாட்டையும் மிகத்தெளிவாக வெளிக்கொண்டு வந்தது சனல்-4 தொலைக்காட்சி.



**காசாவில் நடக்கும் கொடுமைகளுக்கு எதிராக இலங்கை அரசு குரல் கொடுக்கிறது. ஆனால் தனது சொந்த நாட்டில் சொந்த மக்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகளை விசாரிக்கவோ, தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கவோ தயார் இல்லை.**

குறித்த காணொளியினூடாக சர்வதேச அரங்கில் இலங்கை அரசின் பொய் முகத்திரை கிழிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் அக்காணொளி முற்றும் பொய்யான காணொளி என்றும் அது சோடிக்கப்பட்ட, தமிழினத்துக்கு ஆதரவானவர்களால் வெளியிடப்பட்டது என இலங்கை ஆட்சியாளர்களால் அறிக்கையிடப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகளில் இலங்கை அரசு இறுதியுத்த மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் சீனா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளின் நிழலில் மறைந்த இலங்கை பொறுக்கூறலை தள்ளிப்போடத் தொடங்கியது. அந்தத் தள்ளிப் போடல் ஆறிய கஞ்சி பழங்கஞ்சி எனும் நிலைக்கு தள்ளப் பட்டு விட்டது.

மே-18 தமிழ் மக்களின் வலி சுமந்த நாள். இழந்த தமது சொந்தங்களை நினைவு கூரும் நாள் எனப் பிரகடனப்படுத்தி இறந்த தமது சொந்தங்களை தமிழினம் அஞ்சலித்து வருகிறது.

ஆயினும் இறந்த தமது உறவுகளை நினைவுகூறும் உரிமையைக் கூட தரமறுக்கும் ஆட்சிப்பீடம் ஏதோ ஒரு வழியில் தொடர்ந்து அந்நிகழ்வைக் குழப்ப முற்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது.

நிலை இதுவாக இருக்கையில் சனல்-4 தொலைக்காட்சியின் நோஃபயர்ஸோன் இயக்குநர் கெலம் மக்ரே இறுதியுத்த மீறல்கள் தொடர்பில் கருத்து ஒன்றை முன்வைத்துள்ளார்.

நோஃபயர்ஸோன் வெளியாகி 11 ஆண்டுகள் கடந்த நிலையில் அவர் வெளியிட்டிருக்கும் கருத்து சர்வதேச அரங்கில் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

அதாவது "இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மிக மோசமான வன்முறைகள் மற்றும் மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலை நாட்டப்படுவதும் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதும் இன்றியமையாததாகும்.

இறுதியுத்தம் நிறைவுற்று 15 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும் இன்றுவரை தமிழ் மக்களுக்கெதிரான மீறல்கள் தொடர்கின்றன. பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் அந்த வலிகளைச் சுமந்த வண்ணமே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களின் உறவுகளை நினைவுகூருவதற்கான உரிமை கூட மறுக்கப்படும் அளவிலேயே நிலை இருக்கிறது.

வன்னிப்பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த கொடுமைகள் போலவே இன்று காசாவிலும் நடந்து கொண்டிருக்கிறது. எனவே இலங்கை அரசாங்கம் உடன் தமிழ் மக்களுக்கான நீதியை வழங்க வேண்டும்" என அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

காசாவில் நடக்கும் கொடுமையை வன்னிப் பெருநிலப்பரப்பின் இறுதி யுத்தத்துடன் ஒப்பிட்டிருக்கிறார் கெலம் மக்ரே.

காசாவில் நடக்கும் கொடுமைகளுக்கு எதிராக இலங்கை அரசு குரல் கொடுக்கிறது.

ஆனால் தனது சொந்த நாட்டில் சொந்த மக்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகளை விசாரிக்கவோ, தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கவோ தயார் இல்லை என்பதை நினைக்கும் போது நெஞ்சம் கணத்துப் போகிறது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

கார்த்திகைப்பூ எங்கட நினைவேந்தலுக்குரிய பூ. கார்த்திகைப்பூ என்பது மூவகைப்பொருளைக் கொண்டது.

கார்காலத்தில் பூப்பதால் "கார்" என்ற சொல் பூவின் முன்னடையாயிற்று.

நெருப்புப் போன்ற நிறத்தை உடையதால் "தீ" என்ற சொல் "தி" என ஓசை குறைந்து நடுநிலைச் சொல்லாயிற்று.

கார்த்திகைப் பூ என்பதன் மூன்றாம் நிலை "கை" என அதன் வடிவத்தைச் சுட்டி நிற்கிறது.

இவ்விதம் அர்த்தத்தோடு சூட்டப்பட்ட கார்த்திகைப் பூவை பாதணிகளில் பொறிப்பதென்பது மிக மோசமான செயல்.

எனவே அதற்கு வன்மையான கண்டனைத்தை ஆலடியில் தெரிவிக்க வேண்டுமென்று கூற, அனைவரும் எழுந்து நின்று கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

**கங்காணி:-** கார்த்திகை பூ தொடர்பில் விளக்கம் தந்த பண்டிதருக்கு எமது நன்றி எனக் கங்காணி கூற, ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, தீவகத்திலுள்ள ஒரு பாடசாலை மாணவிகள் அங்கு கற்பிக்கும் அருட்சகோதரியால் தாக்கப்பட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதல்லோ அந்த விவகாரம் எப்படி முடிந்தது.

எவ்வளவு வலிமை பெற்று இருக்கிறதென்பதை ஒருவரும் சிந்திப்பாரில்லை.


இந்த நாசமறுத்த மதவாதத்தால ஏழை மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுகினம் என்பது தான் உண்மை.

**சிறாப்பர்:-** எல்லோரும் சேர்ந்து தீவகத்தை நாசமறுத்துப் போட்டினம்.

ஒற்றுமையாக இருந்த தீவக மக்களை மதரீதியில் பிரித்து, மற்றும் தனியார் பல் கலைக்கழகங்களில பட்டப்படிப்பை மேற்கொள்வதாக இருந்தால், அரச பாடத்திட்டத்திற்கமைய சாதாரணதரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி அதன் பெறுபேறுகளை வைத்திருக்க வேணும்.

ஆனால் சர்வதேசப் பாடசாலையில இந்த ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

அப்ப, தீவகத்தில



## தீவக மக்களுக்கு நடக்கின்ற கொடுமைகளைப் பாரீரோ

**மூப்பர்:-** இனி அது பற்றி நாம் கதைத்துப் பிரயோசனம் இல்லை. இன்னும் கொஞ்சக் காலம் போக, பொலிஸில் முறைப்பாடு செய்த மாணவிகளுக்கு கவுன்சிலிங் கொடுக்க வேணும்.

அருட்சகோதரியில எந்தப் பிழையும் இல்லை என்பதாக அறிக்கை விடப்படும்.

**சாத்திரியார்:-** என்ன செய்யிறது இந்த நாட்டில மத ஆதிக்கம் வீதிகளுக்குப் பெயர் மாற்றி எத்தனை கொடுமைகள் நடந்திருக்குது.

**பண்டிதர்:-** உண்மை தான். தீவகத்தில சர்வதேசப் பாடசாலையை ஆரம்பித்து இப்ப அந்த ஏழை மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவும் முடியாது.

க.பொ.த. சாதாரணதரத்தில் பரீட்சை எழுதவும் முடியாமல் செய்திருக்குது.

இலங்கையில அரச உள்ள மாணவர்கள நடுத்தெருவில நிறுத்துறது தானே சர்வதேசப் பாடசாலையின்ர நோக்கம்.

**விதானையார்:-** அது மட்டுமல்ல, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட மாகாணத்தில படித்தவர்கள், புத்திஜீவிகள் அத்தனை பேரும் தங்கட பிள்ளைகள அரச பாடசாலையில சேர்த்துப் படிப்பிக்கினம்.

ஆனால் தீவகத்தில பெற்றாரிட்ட இருக்கிற அறியாமையைச் சாதகமாக்கி, அங்க சர்வதேசப் பாடசாலையில மாணவர்கள் சேர்க்கப்படுகினம்.

இது குறித்து எவரும் துணிந்து கதைப்பதாக இல்லை. நீங்கள் இருந்து பாருங்க அந்த மாணவர்களின்ர எதிர்காலம் எப்படி இருக்குமெண்டு.

**மூப்பர்:-** உண்மையைச் சொன்னால், சிங்களப் பேரினவாதம் செய்த கொடுமைகளை விட, மத அமைப்புகளும் அரச நிர்வாகங்களும் இப்போது தீவக மக்களுக்குச் செய்யிற கொடுமை சொல்லி மாளாது.

**வாத்தியார்:-** சரி... சரி... ஜனாதிபதித் தேர்தலில பொது வேட்பாளரை நிறுத்துகிற விடயம் என்ன மாதிரிப் போகுது.

**சாத்திரியார்:-** அது தானே உங்களுக்குள்ள ஒற்றுமை இல்லை எண்டு ஜனாதிபதி ரணில் எங்கட விக்னேஸ்வரன் ஐயாவிட்ட சொல்லிப் போட்டுப் போயிற்றார்.

**விதானையார்:-** ஏனாம் அவையளிட்ட மட்டும் ஒற்றுமை இருக்குதாமோ. இனப்பிரச்சினை விடயத்தில சிங்களத் தரப்புகள் ஒற்றுமைப்பட்டிருந்தால், எங்கட பிரச்சினைக்கு எப்பவோ தீர்வு கண்டிருக்கலாம் எண்டு விக்னேஸ்வரன் ஐயா ஜனாதிபதி ரணிலிட்ட சொல்லியிருக்கலாமே.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி மோட்டார் சைக்கிளில் நுழைந்த இளைஞர் பற்றி?



தமிழர் தாயகத்தில் 70 வருடங்களாக தமிழின அழிப்பு நடைபெறுவதாக விக்கிபீடியா ஆதாரம் கூறுகிறதே?

**மதுவன் — மீசாலை**

**பாடசாலைப் புத்தகப்பை கசிப்பு பையாக மாறிவிட்டதா வியாசரே?**

காலக் கொடுமை. எப்படி இருந்த இனம் இன்று இப்படி இருக்கிறது என்றால் அவ்வினம் எப்படி திட்டமிட்டு சீரழிக்கப்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்

ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அவ்வினத்தின் பண்பாடு, கலாசாரத்தை உடைத்தாலே போதும். அவ்வினம் தானாக அழிந்துவிடும். இப்போது ஈழத்தில் அதுதான் நடக்கிறது. இனி தமிழினத்தைக் கடவுளால் கூட காப்பாற்ற முடியாது என்பது தான் உண்மை.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்குள் அத்துமீறி மோட்டார் சைக்கிளில் நுழைந்த இளைஞர் பற்றி?**

என்ன செய்வது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கட்டுக்குள் இருந்த எம் இளம் சமூகத்திடம் இப்போது சண்டித்தனக் கலாசாரம் தலைக்கேறிக்கிடக்கிறது.

ஏதோ தம்மை விட்டால் யாரும் இல்லை என்று இடம், பொருள், ஏவல் மறந்து நடப்பது நல்லதல்ல.

இருக்க வேண்டியவர்கள் இல்லை என்பதற்கு யாழ்.போதனாவில் நடந்த சம்பவம் நல்லதோர் உதாரணம்.

அவர்கள் இருந்திருந்தால் தம்பியின் நிலை எப்படி இருந்திருக்கும்.

**பிரபா — அத்தியடி**

**தமிழர் தாயகத்தில் 70 வருடங்களாக தமிழின அழிப்பு நடைபெறுவதாக விக்கிபீடியா ஆதாரம் கூறுகிறதே?**

ஈழத்தில் எம் தமிழ் சொந்தங்கள் உயிரை இழந்து,உறவை இழந்து,சொத்திழந்து இன்றுவரை வாடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் நடந்தது இன அழிப்பே என சர்வதேச நாடுகள் அடித்துக் கூறிக் கொண்டே இருக்கிறது.

தமிழினத்தின் வளங்கள்,பூர்வீக நிலங்கள், மத அடையாளங்கள் , தொல் பொருள் சின்னங்கள் இன்றுவரை சூறையாடப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இதைவிட ஒரு ஆதாரம் வேண்டுமா சொல்லுங்கள்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சிவம் — வதிரி**

**பேருந்தில் ஜன்னலோர சீற் பிடித்து தொலைதூரம் போன அனுபவம் உண்டா உங்களுக்கு?**

பேருந்து,ரயில்களில் ஜன்னலோர சீற் பிடித்து தொலை தூரம் செல்லும் போது இயற்கை அழகை ரசிப்பதில் தனிசுகம் உண்டு. ஆனால் நம்மூர் பஸ்களிலும், ரயில்களிலும் ஜன்னலோர சீற் பிடிப்பதை விட அதைத் திறப்பதில் தானே ரொம்ப கஸ்டம் இருக்கிறது.

**டனுசாந்ராசா — திருநெல்வேலி**

**ஜனாதிபதி பொதுவேட்பாளரை நிறுத்தும் தகுதி தமிழருக்கு இல்லை என ஜனாதிபதி கூறினாராமே?**

பொது வேட்பாளரை நிறுத்துவதென்பது தகுதி சார்ந்த விடயமல்ல. அது எமது உரிமை சார்ந்த விடயம் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

காலம் காலமாக பெரும்பான்மை அரசியல் வாதிகளுக்கு வாக்களித்து நாம் எதைக் கண்டோம். ஏமாற்றத்தைத்தானே சந்தித்தோம்.

அதை பொது வேட்பாளரை நிறுத்தி நிவர்த்தி செய்வோம்.

எமக்கான அடையாளத்தை நாம் உருவாக்க பொது வேட்பாளர் என்ற துரும்புச் சீட்டை நாம் பயன்படுத்த எத்தனிக்கிறோம். இது விடயத்தில் குட்டையைக் குழப்பாமல் இருந்தால் போதும்.நன்றி, வணக்கம்.

**தருண் — வடமராட்சி**

**ஒரு மனிதன் பக்குவமடைந்து விட்டான் என்பதை எப்படி உணர்ந்து கொள்ள முடியும் வியாசரே?**

முப்பத்து இரண்டு பல்லையும் அடிச்சு உடைச்சுப்போட்டு வரவேண்டிய இடத்தில் எமது பல்லைக் கடித்துக் கொண்டு நின்று விட்டு வருவதற்குப் பெயர்தான் பக்குவம். இந்த அனுபவம் பலருக்கும் பல இடத்தில் நடந்திருக்கும். இப்போதைய இளைஞர்கள் மூத்தவர்கள் சொல்கேட்பதுமில்லை அவர்களை மதிப்பதுமில்லை.

அப்படிப்பட்டவர்களை நிலத்தில் போட்டு மிதிக்கத்தான் தோன்றும். எமது மரியாதை எமக்கு முக்கிய மல்லவா?

**ரந்துதன் — வரணி**

**பிரச்சினை... பிரச்சினை... வாழ்வே பிரச்சினையாகி விட்டதே வியாசரே. என்ன செய்ய சொல்லுறீங்கள்?**

ஆண்களாகிய எமக்கு திருமணம் முடியும் வரை முடி கொட்டுகிறது, தொப்பை வைத்து விட்டது, நல்ல வேலை இல்லை, ஓடுவதற்கு மோட்டார் சைக்கிள் இல்லை என்ற பிரச்சினையெல்லாம், திருமணம் முடிந்து விட்டால் கல்யாணத்தை விட அந்தப் பிரச்சினையெல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை என்பது தெளிவாகப் புரிந்து விடும்.

எப்போதும் அனுபவங்கள் பேசும்போது அதில் யதார்த்தம் இருக்கவே செய்யும்.

**திகான் — வடமராட்சி**

**பூசணிக்காயில் குளிர்பானம் தயாரிக்கும் தென்கொரியா பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

பூசணிக்காயில் இனிப்பு பண்டம் செய்பவர்கள் நாங்கள். அதைவிட குளிர்பானத்தில் என்ன இருக்கப் போகிறது.

அமெரிக்காவுடன் ஒட்டி நிற்கும் தென்கொரியாவுக்கு பரசூட் மூலம் குப்பைகளை அனுப்பி வைத்த வட கொரியாவைப் பற்றித் தெரியுமா உங்களுக்கு.

**தேவகி — மாசியப்பிட்டி**

**தவறு செய்தவர்களை திட்டித் தீர்த்து விட்டால் எல்லாம் சரியாகிவிடுமா வியாசரே?**

தேவகி:தவறுகள் இரண்டு வகைப்படும். ஒன்று நமக்குப் பிடித்தவர்கள் செய்வது. மற்றயது நமக்குப் பிடிக்காதவர்கள் செய்வது. இதில் நமக்குப் பிடித்தவர்கள் தவறு செய்தால் சின்னத்தவறு. அதுவே நமக்குப் பிடிக்காதவர்கள் தவறு செய்தால் அது பெரிய தவறு. இவ்வளவு தான் வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: தெய்வப் பிறவி
இயற்றியவர்: தஞ்சை என். ராமையா தாஸ்
இசை: கே.வி. மஹாதேவன்
பாடியவர்: சி.எஸ். ஜெயராமன்



தன்னைத் தானே நம்பாதது சந்தேகம் – அதற்கு
சந்தர்ப்பம் சூழ்நிலை தாய் தந்தையாகும்
சந்தர்ப்பம் சூழ்நிலை தாய் தந்தையாகும்
தானே நம்பாதது சந்தேகம்

மானாபிமானந்தன்னை மறைவாக்கும் – நல்ல
மாண்புடைய மக்களை மடையராக்கும் – மனித
மானாபிமானந்தன்னை மறைவாக்கும் – நல்ல
மாண்புடைய மக்களை மடையராக்கும்
வீணான யோசனைக்கே இடமாக்கும்
வீணான யோசனைக்கே இடமாக்கும் – பல
விபரீத செயல்களை விளைவாக்கும்

தன்னைத் தானே தன்னைத் தானே
தன்னைத் தானே நம்பாதது சந்தேகம்

ஓரிடம் நிலையாக நில்லாத ரதம் போலே ஏ..ஏ
ஓரிடம் நிலையாக நில்லாத ரதம் போலே
உள்ளத்தை ஓடவிடும் – பின்னும்
சேரும் இடம் வந்து சேராத ஓடமாய்
திசை மாறச் செய்து விடும்
ஊரார் சொல் பொய்யதனை ஊட்டிவிடும் – உண்மை
உரைப்பார் சொல் தப்பெனவே வில்க்கிவிடும் –காதில்
ஊரார் சொல் பொய்யதனை ஊட்டிவிடும் – உண்மை
உரைப்பார் சொல் தப்பெனவே வில்க்கிவிடும் – மனம்
மாறாத காதலர்க்குள் பகைமை மூட்டி விடும்
மாறாத காதலர்க்குள் பகைமை மூட்டி விடும்
மனிதனை விலங்காக்கிடும்

தன்னைத் தானே நம்பாதது சந்தேகம்

ஞானோதயம் குறைந்தால் தொத்தும் ரோகம்
நம்பிக்கை அற்றவர்க்கே துன்பமாகும் – சுத்த
ஞானோதயம் குறைந்தால் தொத்தும் ரோகம்
நம்பிக்கை அற்றவர்க்கே துன்பமாகும் – அது
ஆணோடு பெண்ணிடமும் வரும் போகும்
ஆணோடு பெண்ணிடமும் வரும் போகும் – அதற்கு
ஔஷதம் ஒன்றே தான் நல் விவேகம்
ஔஷதம் ஒன்றே தான் நல் விவேகம்

தானே தன்னைத் தானே
தன்னைத் தானே நம்பாதது சந்தேகம்

# ஒற்றைப் பாடல்
## உச்சம் தொட்ட ஈழத்து இளைஞன்

**“ ஈழத்து இளைஞன் ஒருவனின் பாடலை தெற்கு சிங்கள மக்கள் கொண்டாடுகிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடியுமா? ஆனால் அதுதான் உண்மை.**

கடவுள் கொடுக்க நினைத்தால் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பார் என்றொரு சொல்லாடல் உண்டு.

யாழ்ப்பாணம் இருபாலையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் சோஜன் என்ற 24 வயது இளைஞனின் வாழ்விலும் அப்படி ஒரு அதிசயம் நடந்திருக்கிறது.

**“பண்ணைப்பக்கம்பைக்கில போனாளே!**
**பொண்ணுங்களா நிக்குது தன்னாலே!**
**அது மஞ்ச சட்டை போட்டுக்கிட்டு**
**மயக்க வந்தாளே - என்னைப்பார்த்து**
**கொஞ்சிச் சிரிச்சாளே!**
**சிங்கிளாத்தான் சுத்தவிட்டுட்டாளே - அவ மாவாபோட்ட மஞ்சான்காரனை அமைக்க வந்தாளே!**
**மாமாதான் பின்னால் வாரான்டா**
**எனக்கு லைசன்சு கூடஇல்லடா**
**மச்சி பைக்கத்தான் கொஞ்சம் திருப்படா!**
**இப்போ கன்ரட்டில் ஸ்பீட ஏத்துடா”**

இதுதான் சோஜனின் உருவாக்கத்தில் பாடப்பட்ட அந்தப்பாடல்.

“மே காமினி...” என்ற சிங்களப் பாடலின் BGM இற்கு எம் சி ஷான் வரிகள் எழுத, சோஜன் பாடி, நடித்து அதை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார்.

தனது பாடல் இவ்வளவுக்கு வைரல் ஆகும் என கனவிலும் நினைத்திருக்கவில்லை அவர்.

ஆம், பதிவிட்டு ஒரு சில வாரத்தில் 6.2 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்து சாதனை படைத்து வருகிறது அந்தப் பாடல்.

ஈழத்து இளைஞன் ஒருவனின் பாடலை தெற்கு சிங்கள மக்கள் கொண்டாடுகிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடியுமா? ஆனால் அதுதான் உண்மை.

சோஜனின் அந்தப் பாடல் சிங்கள மக்கள் மத்தியில் மிகப் பிரபல்யமாகி விட குறித்த பாடல் வரிகளின் சிங்கள மொழியாக்கத்திற்கு பல இலட்சம் சிங்களவர்கள் ஏங்கி கிடக்கின்றனர் என்பதுதான் வியப்பூட்டும் விடயம்.



24 வயது உடைய நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த சோஜன் பாடல், நடனம், நடிப்பு என பல்திறன் கொண்டவராக திகழ்ந்தாலும் அவருக்கான வாய்ப்புகள் சரியாக கிடைக்கவில்லை.

இப்போது சோஜனின் திறமைக்கு களம் அமைத்துக் கொடுக்க சிங்கள சகோதரர்கள் பலர் தயாராக இருப்பதாகவும் பல அழைப்புகள் வருவதாகவும் அவர் புன்னகையுடன் தெரிவித்தார்.

நிச்சயம் ஒவ்வொருவரிடமும் தனித் திறமைகள் புதைந்து கிடக்கும். அதைக் கண்டறிந்து பிரயோகித்தால் உச்சம் தொடலாம் என நம்பிக்கையுடன் பேசுகிறார் சோஜன்.

கல்வி முக்கியமானதுதான். அதில் சறுக்கிவிட்டால் சோர்ந்து வீட்டில் முடங்கினால் அது எம்மை தவறான வழிக்கே இட்டுச் செல்லும். எம்மிடம் இருக்கும் தனித்திறமையை காட்டினால் அது எம்மையும் எமது சமூகத்தையும் அடையாளப்படுத்தும் என இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார் சோஜன்.

சோஜனின் குறித்த பாடல் வைரலானதைத் தொடர்ந்து ஈழத்து, வெளிநாட்டு ஊடகங்களில் அவரின் செவ்வி அடித்து தூக்கி நிற்பதை அவதானிக்க முடிகிறது.

குறித்த வீடியோக்களும் பல இலட்சம் பார்வையாளர்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெற்கு சினிமா, புலம் பெயர் நாடுகளிலிருந்து பல்வேறு அழைப்புகள் வந்திருந்த போதிலும் தான் அடுத்த படைப்பில் தீவிர கவனம் செலுத்தி மிகக் கவனமாக அடுத்த அடியை எடுத்து வைக்கவே விரும்புகிறேன்.

அடுத்த படைப்பு வெற்றி பெற வேண்டும் என்றால் கடுமையான உழைப்பும் மெதுவான நகர்வும் அவசியம் என்று முதுமை பெற்று நிற்கிறார் சோஜன்.

எமது இளைஞர்கள் போதைக்கு அடிமையாகிக் கிடக்கிறார்கள் தவறான பாதையில் செல்கிறார்கள் என எமது எதிர்கால இளைஞனை நினைத்து வருந்தும் நாம் வெற்றி பெறும் இளைஞர்களைத் தட்டிக் கொடுத்து தூக்கி விடுவோமாக இருந்தால் அவர்களின் வழியில் எம் இளம் சமூகம் செல்லத் தொடங்கும்.

அதற்கு இது ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கும் இதையே சோஜனின் பண்ணை பக்கம்... பாடல் எடுத்தியம்பி நிற்கிறது.

**மாவை. நா.கஜேந்திரன்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகில் மிகச் சுவையாக சமைக்கும் பெண்கள்



ஒரு நல்ல உணவு வயிற்றை மட்டுமல்ல மனதையும் நிரப்பிவிடும். 'இந்தப் பிறப்புத்தான் நல்லா ருசிச்சு சாப்பிட கிடைச்சது' என பல உணவகங்களைத் தேடித் தேடி உண்ணும் பழக்கம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. ஊர், இடம், கடையின் பெயர் என ஓர் உணவைச் சொன்னாலே அது இங்க தான் ஃபேமஸ் எனச் சொல்லும் மக்கள் இருக்கின்றனர்.

வெளியில் சாப்பிட்டாலும் வீடுகளில் செய்யப்படும் உணவுகள் தனிரகம். குழந்தைகள் முதல் பெரிய வர்கள் வரை ஒவ்வொருவரின் சுவைக்கு ஏற்ப பெண்கள் சமையல் செய்வதுண்டு.

இந்நிலையில் பிரபல வோக் இதழானது, உலகின் எந்தெந்த நாடுகளில், பெண்கள் மிகச் சுவையாகவும், அதிக வெரைட்டிகளிலும் சமைக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. அதில் இந்தியாவும் இடம்பெற் றுள்ளது.

உலகில் பெண்கள் மிகச் சுவையாகவும், அதிக வெரைட்டிகளிலும் சமைக்கும் முதல் ஐந்து நாடுகள்.

**இத்தாலி:**

இந்தப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருப்பது இத்தாலி. இங்குள்ள பெண்கள் பாஸ்தா மற்றும் சாஸ்களில் பல வகையான உணவுகளைத் தயாரிக்கி றார்கள்.

**ஜப்பான்:**

இந்தப் பட்டியலில் நான்காவது இடத்தில் ஜப்பான் இருக்கிறது. ஜப்பானிய பெண்கள் தாங்கள் தயாரிக்கும் உணவுகளைக் கலைநயத்தோடு காட்சிப்படுத்துவதில் கை தேர்ந்தவர்கள். சுஷி மற்றும் பாரம்பரிய ஜப்பானிய இரவு உணவான கைசேகி (Kaiseki) தயாரிப்பதன் மூலம் பிரபலமாக அறியப்படுகிறார்கள்

**மெக்சிகோ:**

மூன்றாவது இடத்தில் மெக்சிகோ இருக்கிறது. மெக்சிகன் பெண்கள் டாகோஸ் (tacos) மற்றும் மோல் (Mole) போன்ற உணவுகளில் உள்நாட்டு மசாலாக்கள் மற்றும் மூலிகைகளைப் பயன்படுத்திச் சமைக்கிறார்கள்.

**பிரான்ஸ்:**

இரண்டாவது இடத்தை பிரான்ஸ் பிடித்துள்ளது. பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி மிகவும் நுணுக்கமாக கோகோ வேன் மற்றும் நேர்த்தியான கேக்குகளை (pastries) தயாரிக்கின்றனர்.

**இந்தியா:**

இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது இந்தியா. உலகளவில் சிறந்த சமையல்காரர்களாக இந்திய பெண்கள் உள்ளனர். இந்தியாவின் பல பகுதிகளிலும் வித்தியாசமான முறைகளில் வித விதமான உணவு களை பெண்கள் செய்கின்றனர்.

# உங்கள் பெயரில் L, K, G, V உண்டா?

பெயரில் இடம்பெறும் எழுத்துகளுக்குத் தனித்துவ குணம் உண்டு என்கின்றன. நியூமராலஜி - பெயரியல் ஜோதிடம் சார்ந்த நூல்கள். அவ்வகையில், L, K, g, V ஆகியவற்றை பெயரில் கொண்டிருக்கும் அன்பர்களின் குணம், எதிர்காலம் குறித்து ஜோதிடம் தரும் தகவல்களை அறிவோமா?

**L:** இதன் ஆதிக்க எண் - 3; ஆதிக்கக் கிரகம் - குரு. பெயரில் L எனும் எழுத்தை முதல் எழுத்தாகவோ, அதிக எண்ணிக்கையிலோ கொண்டவர்கள், நினைத்த காரியத்தைச் சாதித்துக் காட்டுவார்கள். காரியவாதிகள், ஞாபகசக்தி அதிகம் கொண்டவர்கள். தனது குறிக்கோளை நிறைவேற்ற எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள். இவர்களுக்குப் புதிய புதிய சிந்தனைகள் உருவாகும். மற்றவர்களைப் பயன்படுத்தியே முன்னுக்கு வந்துவிடுவார்கள். பிழைக்கத் தெரிந்த புத்திசாலிகள். முதலீடு இல்லாமல் முன்னேற்றம் அடைவார்கள்.

இவர்கள் தந்திரசாலிகளாக இருப்பார்கள். அரசியலில் ராஜ தந்திரம் படைத்தவர்கள். வாக்கு சாமர்த்தியத்தால் யாரையும் மடக்கி விடுவார்கள். தனது திறமையை முறையாகப் பயன்படுத்தி வெற்றி காண்பார்கள். பணம் படைத்தவர்களின் நட்பு இவர்களுக்குக் கிடைக்கும். வாதம் செய்வதில் திறமைமிக்கவர்கள். எதிரியை வசப்படுத்துவதில் திறமைசாலிகள். பொது அறிவு அதிகம் உடையவர்கள்.

**K:** இந்த எழுத்தின் ஆதிக்க எண் - 2 ஆதிக்கக் கிரகம்: சந்திரன். பெயரில் K எனும் எழுத்தை முதலெழுத்தாகவோ, அதிக எண்ணிக்கையிலோ பெற்றிருக்கும் அன்பர்கள் கலைத்துறையில் பெயரும் புகழும் பெற்றுத் திகழ்வர். பல கலைகளைக் கற்று வைத்திருப்பார்கள். சகலகலா வல்லவர்களாகத் திகழ்வார்கள். முன்னேறவேண்டும் என்பதில் அதிக ஆர்வமிருக்கும். உலக மக்களுக்கு நன்மை செய்யப் பாடுபடுவார்கள்.

தாய்ப் பாசம், தாய்நாட்டுப்பற்று, குடும்பப்பற்று அதிகம் உள்ளவர்கள் இவர்கள். தன்னை நம்பியவர்களைக் காப்பர். தன்மானம் காப்பதில் நிகரற்றவர்கள். மக்களிடம் நன்மதிப்பு இருக்கும். மேன்மையான குணம் பொருந்தியவர்கள். தன்னலம் கருதாமல் சேவை செய்யக்கூடியவர்கள். தூய்மையானவர்கள். பெரும் செல்வம் சம்பாதிப்பார்கள். இந்த எழுத்து பெயரின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ எங்கு வந்தாலும் சிறப்பான பலன்களையே தரும். என்றாலும், பெயரின் முதலில் வந்தால், மேற்கூறிய பலன்கள் அதிகமாக இருக்கும்.


**G:** இதன் ஆதிக்க எண் - 3 ஆதிக்கக் கிரகம்: குரு. இந்த எழுத்து எல்லா வகையிலும் உயர்ந்த எழுத்தாகும். பெயரில் G எனும் எழுத்தை முதலெழுத்தாகவோ, அதிக எண்ணிக்கையிலோ பெற்றிருக்கும் அன்பர்கள், தியாக உள்ளம் கொண்டவர்கள். எப்பேர்ப்பட்ட கடினமான வேலைகளையும் செய்து முடிக்கும் திறமை கொண்டவர்கள். மற்றவர்களின் நலனுக்காகப் பெரிய தியாகங்களைச் செய்யக் கூடியவர்கள். சோதனைகளை வென்று சாதனை படைக்கக் கூடியவர்கள். இவர்களுடைய திட்டங்கள் எல்லாமே வெற்றி அடையும். புதிய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கக் கூடியவர்கள்.

தாய்நாட்டின் நலனுக்காகப் பாடுபடக்கூடிய இவர்கள் நீதி, தர்மங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். கடமை தவறாதவர்கள். அன்பு நிறைந்தவர்கள். பொறுமைசாலிகள். இவர்களின் நம்பிக்கையே எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றலை இவர்களுக்குத் தந்துவிடும். இவர்கள் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இல்லையென்றால், மனம் தீய வழிகளில் சென்று, வாழ்க்கையின் போக்கையே திசை மாற்றிவிடும்.

இவர்களின் மனதில் புதுப்புது எண்ணங்கள் உருவாகும். தத்துவம், புராணம், விஞ்ஞானம் போன்றவற்றில் ஆராய்ச்சி செய்வார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்குச் சென்று வருவதில் விருப்பம் உள்ளவர்கள்.

**V:** இதன் ஆதிக்க எண் - 6 ஆதிக்க கிரகம் - சுக்கிரன். பெயரில் இந்த எழுத்தை முதலெழுத்தாகவோ, அதிக எண்ணிக்கையிலோ பெற்றிருக்கும் அன்பர்கள், வாழ்வில் உன்னத நிலையை அடைவார்கள். தூய்மையான எண்ணமும், சுயமாக சிந்தித்துச் செயற்படும் ஆற்றலும் கொண்டவராக இருப்பார்கள். எல்லோரிடமும் நன்கு பிரியத்துடன் பழகுவார்கள். இவர்கள் எளிதில் யாரிடமும் ஏமாற மாட்டார்கள். மற்றவர்களைப் பார்த்தவுடன் அவர்களைப் பற்றி கணித்துவிடுவார்கள்.

நண்பர்களிடம் நல்ல நட்பும் நம்பிக்கையும் இருக்கும். நிறைய நண்பர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு நண்பரும் இவருக்கு ஏதாவது ஒரு விதத்தில் பயனுள்ளவராகவே இருப்பார். ஓய்வு உறக்கமின்றி சுறுசுறுப்பாக உழைப்பார்கள். ஆன்மிகத்தில் பற்றுதல் அதிகம். அறி வின் மூலம் பொருள் சேர்ப்பார்கள். தன்னம்பிக்கை மிகுந்து காணப்படும். கல்வி கேள்விக ளில் சிறந்து விளங்குவார்கள். சுயநலம் பாராமல் பலருக்கு வேலை வாங்கிக் கொடுப்பார்கள். தொழிலை ஏற்படுத்தித் தருவார்கள். இவர்களின் மூலம் உதவியைப் பெற பல பேர் எப்போதும் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். இவர்களின் குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். கலைகளில் ஆராய்ச்சி உடையவராக இருப்பார்கள். வெற்றிகரமான சிந்தனையும், எதிலும் சாதனையும், நல்ல பேரும், புகழும் பெற்றிருப்பார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## முள்ளிவாய்க்கால் ஆன்மாக்களின் குரல்

அரவணைத்துக் கூட்டிச் சென்று
ஆறுதல் வார்த்தை கூறி
இன்னல்கள் பலவும் செய்த
ஈனர்கள் உமை மறவோம்.

உண்மைபோல் பொய்கள் கூறி
ஊமையராய் எம்மை எண்ணி
எத்தனை கொடுமை செய்தீர்
ஏற்குமோ எங்கள் உள்ளம்

ஐயம் எதுவும் இன்றி
ஒருமித்து வந்தோம் நம்பி
ஓவெனக் குமுற வைத்தீர்
இதுதானோ மனித நீதி

துயரங்கள் பலவும் செய்த
துட்டரே எங்கு செல்வீர்
துயரங்கள் புரிந்த உம்மை
துரத்தி நாம் சங்கரிப்போம்

**சில்லையூர் செல்வநாதன்**

## வழிந்தோடும் கண்ணீர்!

ஈழத்தமிழினம் மரபு
சொல்ல மறந்தது
இழந்தபின் சுடர் ஏற்றவா?

வழிந்த கண்ணீர் நிற்கவில்லை
நொந்த மனசு துடிக்கையில்
கட்டவிழ்த்து விட்டது
கட்டுமரம் ஆடத்தானோ?

வீரம் கண்ட
மண்ணில் வித்தைகள்
எத்தனை!

விட்ட புகை
காற்றில் மிதந்து வர
பத்த வைத்த குச்சி
சாம்பலாகிப் போச்சு

வேண்டி வந்த போத்தல்
குறையாய் கிடக்க,
கூட்டி வந்தவள் கட்டிலோடு
போக,

தேடி வந்தவர்கள்
கத்தியோடு நிக்கினம்
வாசலில்!

செம்பாட்டு மண்ணை
தடவிப் பாருங்கள் ரத்தம்
மூடியிருக்கும் மிகுதி
சொல்லும்

**S.A. கோகுல[illegible]**

# மௌனத்தின் தேடல்-718



## அஞ்சாத நெஞ்சம்

முகத்திற்கு நேரே நின்று
துப்பாக்கி காட்ட துணிவில்லையா
உனக்கு?
முகமூடிக்குள் முகத்தை மறைத்துக்
கொண்டால் என்ன
நீ யாரென்று புரியாமல் விடுமா?
துணிவின்றி இரக்கமின்றி
நீதியின்றி துப்பாக்கி தூக்காதே!
நெஞ்சினில் துப்பாக்கி நெருங்கி
நின்றபோதும் அஞ்சாத நெஞ்சம்
கொண்ட மனிதன் தான் வாழும்
வரை இல்லை வாழ்ந்த பின்பும் வீரனாவான்

**அபி-இலம்ாலிகா, சித்தன்கேணி.**

## மூலதனம்

வித்தையான இவ்வுலகில்
வெறுமையான வாழ்க்கைதனில்
விலங்குடையில் நீ போடும்-வேடம்
மனிதவர்க்கத்திற்கே நீ விடும்-சவம்
விழித்துக்கொள் மனிதா...
இவ்விரண்டுமே நிலையற்ற
மூலதனம் என்று.....

**ஆ.லக்ஷ்மி, மகாறம்பைக்குளம்.**

## இயந்திர மனிதன்

நானும் அதுவும்
பேசிக் கொண்டது
சைகை மொழிதான்
என்னை பறக்கும் தட்டில்
கடத்தப் போகிறதாம்
அதற்கு என்ன?
நானும் இயந்திர மனிதன்தான்

**பி.மதுஷ்சன், தையிட்டி.**

## போலி வேஷங்கள்

போலி வேஷம் போட்டு உன்னை
போக்கிரிப் பயலாக்கி விட்டானே
துப்பாக்கிய முனையில் நீயும்
துர்ப்பாக்கியசாலி ஆகி விட்டாயே
வேஷம் என்பது விஷம் என்பதனை
வேதங்கள் கூடக் கூறுகின்றதே!
பணக்கொள்ளையர் போடும்
–மாறுவேடம்
பயப்பீதியை ஏற்படுத்தி விட்டிடும்
சொத்துக்காக உடன் பிறந்த உறவுச்
சொந்தங்கள் போடுவது பாசவேஷம்
பணக்கொள்ளையர் போடும்
–மாறுவேடம்
பயப்பீதியை ஏற்படுத்தி விடுகின்றதே
மனிதர்கள் எல்லாம் மிருக் குணமாய்
– மாறி விட
மிருகங்கள் எல்லாம் நன்றி மறவா
ஜீவனாகி விட்டதே
இதை நீயும் உணர்ந்திட்டால்
இவ்வுலகில் இன்பமாய் வாழலாம்

**ஆ.செல்வி,**
**திருநாவலூர்.**

## போலியும் போதையும்

குற்றங்கள் முடிவிற்கு வருமென்று
சுறுசுறுப்புடன் பவனி வரும்
சுற்றி வளைப்புக்களிலிருந்து
சுறாக்கள் எப்படியோ தப்பிவிடும்
குஞ்சு மீன்கள் நாளும் வலையில் மாட்டுவது
மூன்று இலக்கத்தின் எல்லை தொடும்
வேறு கிரகவாசியிடம் செல்லாது
தாறுமாறும் தில்லு முல்லுமாயினும்
இவரும் போலியாக இருந்து விட்டால்
இருளும் விலகுவது கடினமாகி விடும்

**க.நாகராசா, நுணாவில்.**

## போராடத் தான் வேண்டும்

வேற்றுக்கிரக வாசியோ, முகமூடி மனிதனோ?
நெஞ்சுக்குத் துப்பாக்கியை நீட்டிய போதும்;
மரணத்தைத் தழுவ தைரியமாக நிற்கிறாய்
சாகப்போகும் எறும்பு கடிக்கிறது;
தேனீ கொட்டுகிறது-நீ விதிவிலக்கா?
இந்தக் கணப்பொழுதில் உயிரைக் காக்க
உன் கைகள் போராடத்தான் வேண்டும்
பூப்பறித்துக் கொண்டு இருக்கக் கூடாது

**பிரம்மா யதுர்சன், கொக்குவில் இந்துக் கல்லூரி**

# மௌனத்தின் தேடல்- 719



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், இல.191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



13 செங்கை ஆழியான்

தாழ்ந்த கூரைகளைக் கொண்ட கற்கட்டடங்கள் காணப்பட்டன. மக்களது வீடுகள் விறாந்தைகளையும், தலைவாசல்களையும் கொண்டிருந்தன. வீடுகளின் முன்பக்கங்கள், வீதிப் பக்கமாவிருக்காது உட்பக்கமாவிருந்தன. மண் சுவர்களையும் ஓலைக் கூரைகளையும் கொண்ட வீடுகள் அதிகமாகக் காணப்பட்டன.

ஒல்லாந்தர் முற்றுகையிட்டுள்ளனர். பெரும் யுத்தம் நடக்கப்போகிறது எனக் கேள்விப்பட்டதும் வீடுகளுக்குள் ஒடுங்கிக் கொண்ட மக்கள் மூன்று நாட்களின் பின்னர் வழைமைக்குத் திரும்பிக் கடைத் தெருவுக்கு வரத்தொடங்கினர். எவர் ஆண்டாலென்ன என்ற மனப்போக்கு அன்று யாழ்ப்பாண மக்களிடமிருந்தது போலும். முற்ற வெளியில் முற்றுகையிட்டிருந்த ஒல்லாந்தப் படைவீரர் இடையிடையே கடைத்தெருவுக்கம் வந்தனர்.

பாசாறையிலிருந்த வீரர்கள் பட்டினத்திற்கு வருவதும் வியாபரிகளிடம் தமக்குத் தேவையான பொருட்களை அள்ளிக்கொள்வதும் பிரச்சினைத் தோற்றுவித்தன. யாழ்ப்பாண மக்களது ஆடையணிகள் ஒல்லாந்தருக்கு வியப்பினைத் தந்தன. வேட்டியை மடி வைத்துப் பஞ்சகச்சமாக ஒரு சிலர் கட்டியிருந்தனர் அவர்களிற் சிலர் சால்வை தரித்திருந்தனர் வேறு சிலர் அரையில் சிறுதுண்டு மட்டும் கட்டியிருந்தனர்.

பெண்களில் பெரும்பாலானோர் ரவுக்கை அணியாது சேலைத் தலைப்பால் மார்புகளை மூடியிருந்தனர். ஒரு பகுதிப் பெண்கள் இடுப்பில் சேலையை மட்டும் மடித்துக் கட்டியிருந்தனர். யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டும் தாக்காது கொமுசாறி வன்ஹூன்ஸ் காலம் கடத்தி வருவது வியப்பாகவிருந்தது அவனது திட்டம் வேறாகவிருந்தது. கோட்டைக்குள் புகுந்திருக்கும் ஆயிரம் பேருக்கும் உணவுப் பஞ்சம் ஏற்படும், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும், இருக்கின்ற உணவு முடிந்ததும் அவர்கள் வலிவிழந்து தாக்குதல்களைத் தொடங்குவார்கள்.


பட்டினி போடுவதுதான் அவர்களைப் பணியவைக்க அல்லது அழிக்கச் சரியான வழியெனக் கொமுசாறி வன்ஹூன்ஸ் நம்பினான். அவனது எண்ணம் பொய்க்கவில்லை. கோட்டை கொத்தளங்களில் நின்றிருந்த போர்த்துக்கேயர்களிடம் அமைதியின்மை, சோர்வு என்பன ஏற்படுவதை அவதானித்தான். கோட்டைக்குள் பட்டினி நிலை தோன்றிவிட்டது.

கோவாவிலிருந்து உதவிகள் வரும் எனப் போர்த்துக்கேயர் எதிர்பார்த்தது பொய்த்துவிட்டது.

(தொடரும்...)

# கடல் புறா

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?




அக்ஷயமுனைக் கோட்டை மாளிகைக்குள் தான் நிதிப் பெட்டிகளைக் கொண்டு வந்த நாளிலிருந்து அடுத்த ஒரு வாரம் முடிய பலவர்மன் பெரும் சாதுவாகி விட்டதையும் மாளிகையிலும் கோடையின் இதர பகுதிகளிலும் தான் ஏற்படுத்திய மாறுதல்களில் ஒன்றுக்குகூட அவன் எந்த எதிர்ப்பையும் காட்டாதையும், சகலதையும் ஆதரித்தும் ஆமோதித்தும் வந்ததையும் கவனித்த இளைய பல்லவன் சித்தத்தில் அந்த வாரம் முழுவதும் பெருத்த சந்தேகம் எழுந்து உலாவிக் கொண்டிருந்ததாகையால் தான் புரிந்த அலுவல்கள் அனைத்தையும் மிகுந்த தீர்க்காலோசனையுடனே செய்து வந்தான்.

எழுந்து நடந்து வரும் புலியை விட உறங்குவதுபோல் இருக்கும் முக்கால் கண் மூடிய புலி பெரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியதென்பதை அறிந்திருந்த சோழர் படைத்தலைவன், பலவர்மன் மீது ஒரு கண் வைத்தே தன் வேலைகளைச் செய்து வந்தான்.

சொர்ணத்தீவின் பூர்வகுடிகளிடம் அக்ஷயமுனைக் கோட்டை மக்களுக்குள்ள பயத்தை உடைப்பதும், பூர்வகுடிகளின் எதிர்ப்பு ஏற்பட்டால் அதை மக்களைக் கொண்டே சமாளிப்பதும், இடையே அக்ஷயமுனைத்தளத்தில் தனது மரக்கலத்தைத் திடப்படுத்திக் கொள்வதும் ஆகிய மூன்றும் முக்கிய பணிகளென்பதைத் தீர்மானித்துக் கொண்ட இளையபல்லவன் அதற்கான பணிகளில் மும்முரமாக இறங்கினான்.

அத்தகைய பணிகளிலும் அக்ஷயமுனைக் கோட்டை வாசிகளின் ஒத்துழைப்பும் கடற்கரைக் கொள்ளையர் ஒத்துழைப்பும் பூர்ணமாயிருந்தது. சோழர் படைத்தலைவனுக்கு. காணப்தற்கரிய பெரும் செல்வத்தைக் கண்களால் கண்ட அக்ஷயமுனை நகரவாசிகளும் சரி, கொள்ளையரும் சரி இத்தகைய பெரும் செல்வத்தைத் திரட்டுவதானால் பெரும் சாதனைகளுக்குப் பின்புதான் திரட்ட வேண்டும். இத்தகைய செல்வத்தை ஓர் உபதலைவன் பெற அகூதா அனுமதித்திருக்க வேண்டுமானால் அந்த உபதலைவனின் திறமை அற்ப சொற்பமானதாயிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார்கள் ஆதலாலும், அத்தனை செல்வமும் அக்ஷயமுனையைப் பலப்படுத்தவே உபயோகப்படுமாதலால் அக்ஷயமுனையில் தொழிலுக்கும் ஊதியத்திற்கும் குறைவிருக்காதென்பதை உணர்ந்து கொண்டார்கள்ஆதலாலும், இளைய பல்லவன் எள்ளென்பதற்கு முன்பு எண்ணெயென முனைந்து நின்றார்கள்.

அத்தகைய ஒத்துழைப்பைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்வதில் இளையபல்லவன் ஒரு விநாடி கூட அலட்சியம் காட்டாமல் விடுவிடுவெனத் தன் அலுவல்களைச் செய்தான். அந்த அலுவல்களில் இறங்குவதற்கு முதல் நடவடிக்கையாகத் தனக்கெனப் பிரத்தியேமாக ஓர் அறையை வேண்டிய படைத்தலைவன் பலவர்மன் மாளிகையின் மாடியறையைத் தனது இருப்பிடமாக்கிக் கொண்டான்.

அந்த அறையை தான் உபயோகிப்பதால் ஏதாவது அசௌகரியமுண்டாவென இளையபல்லவன் கேட்டதற்கு, "எந்த அசௌகரியமுமில்லை. இந்த மாளிகையே தங்களுக்குச் சொந்தம்" என பதில் வந்தது அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவனிடமிருந்து.

அந்தப் பதிலும் அது சொல்லப்பட்ட இனிப்பான முறையும் சற்று அதிர்ச்சியைத் தந்ததானாலும், அந்த அதிர்ச்சியைச் சற்றும் வெளிக்குக் காட்டாமல் புன்னகை தவழும் வதனத்துடன் அக்ஷயமுனைக் கோட்டைக் காவலனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அந்த அறையில் தங்குவதற்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்துகொண்டான் சோழர் படைத் தலைவன்.

நிதிப் பெட்டிகளை பொக்கிஷ அறைக்குக் கொண்டு செல்லவும் பாதுகாக்கவும் சேந்தனுக்க உத்தரவிட்ட பிறகு, மாளிகையைச் சுற்றிப் பார்த்த இளைய பல்லவன், மாளிகையின் மாடியறையை விடத் தன் வேலைக்குச் சிறந்த இடம் வேறு எதுவுமில்லை யென பதை முடிவு செய்துகொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்


402

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நோயுற்றவர்களின் உரிமைகள் மீறப்பட்டால்

நோயாளர்களின் உரிமைகளை மதித்து நடப்பது மருத்துவக் குழுவின் கடமையாகும். அதே போல் நோயாளர்களுக்கும், அவர்களின் உறவினர்களுக்கும் சில முக்கியமான கடமைகள் இருக்கின்றன. அவை யாவன :

- சகநோயாளர்களை மதித்து நடத்தலும், அவர்களுக்கு இடையூறு செய்யாது இருத்தலும்.
- வைத்தியசாலையை அசுத்தம் செய்யாது துாய்மையாகப் பாதுகாத்தல்.
- தமது நோய்நிலை பற்றிய போதிய விளக்கம் ஏற்படாத விடத்து மருத்துவக் குழுவுடன் நேரடியாக நீங்கள் பேசி, நிலைமையைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல்.மூன்றாம் நபரினூடாக உங்கள் சுகம் பற்றி அறிய முயற்சிப்பது நல்லதல்ல.
- மருத்துவத்துறையின் மேம்பாட்டிற்கு உங்கள் பங்களிப்புக்களை வழங்குதல்.
- உங்கள் உடற்சுகத்திற் கவனமெடுத்து நீங்கள் நோயாளியாவதைத் தவிர்ப் பதன்மூலம் சுகாதாரத் துறைக்கு ஏற்படும் வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்ளல்.
- இன்னொரு நோயாளியின் சுகம்பற்றி மருத்துவக் குழுவிடம் வினவுவதைத் தவிர்த்தல். காரணம்: ஒவ்வொரு நோயாளியின் நோய்நிலை சம்பந்தமான தகவல்கள், அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட வேண்டும். இந்த நோயாளியின் நேரடியான அனுமதி இல்லாமல் அந்தத் தகவல்களை வெளிப்படுத்தும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை.
- வைத்தியசாலையின் சட்ட விதிகளை மதித்து நடத்தல்.



ஒவ்வொரு துறையிலும் எமக்கு இருக்கும் உரிமைகளைத்தெரிந்து வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகும். அத்துடன் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எம்மால் இயன்றவற்றைச் செய்து தான் ஆகவேண்டும்.

உரிமை என்ற பேச்சை எடுப்பதற்கே அச்சப்படும் ஒருநிலை காணப்படுகிறது. எமது உரிமைகள் மீறப்படுவதாக நாம் உணரும்பொழுது அது சம்பந்தமாகப் பேசுவதற்கு அச்சப்படவோ வெட்கப்படவோ வேண்டியதில்லை. உரிமைகளை மறுப்பவன்தான் உண்மையிலே மனித குலத்தின் முன் வெட்கப்படவேண்டியவன்.

மருத்துவத்துறையிலே நோயாளர்களின் உரிமைகள் பற்றிப்பேசுவது மருத்துவக் குழுவுக்கும் நோயாளர்களுக்கும் இடையே முரண்பாடு களைத் தோற்றுவிப்பதாக அமைந்து விடக் கூடாது. உண்மையிலே அதுஒரு பரந்துபட்ட புரிந்துணர்வை ஏற்படுத்தி மருத்துவக் கவனிப்பு முறைகளை மேம்படுத்தும் ஓர் உந்து சக்தியாகவே அமைய வேண்டும். நோயாளர்களின் கவனிப்பு முறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப் பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. இவற்றைச் சட்ட வரையறைக்குள் அடக்கி விட முடியாது.

ஒவ்வொரு நோயாளியும் குணப் பட்டுச் செல்லும்பொழுது அவனும் அவனது குடும்பமும் மட்டுமல்ல மருத்துவக்குழுவும் மகிழ்ச்சி அடையும். ஒரு நோயாளி இறந்து விட்டால் அவனது குடும்பத்துடன் சேர்ந்து மருத்துவக்குழுவின் உள் மனமும் அழும். ஆனால் தொடர்ந்து அழுது கொண்டிருக்க முடியாது. காரணம் அடுத்த நோயாளியைப் பார்க்க வேண்டும் என்ற கடமை இருக்கும். எத்தனையோ மரணங்களையும் துயரங்களையும் பார்த்து விட்ட காரணத்தால் நோயாளிகள் தமது அறிவுரைகளைக் கடைப் பிடிக்காத பொழுது, அவர் களுக்கும் அதே கதி நேர்ந்து விடுமோ என்று மருத்துவக்குழு வின் மனம் பதை பதைக்கும்.

இவ்வாறான மன உணர்வுகளை எந்தச் சட்டக்கோவை யினுள் உள்வாங்குவது? மருத்துவத் துறையில் மட்டுமல்ல எந்தத் துறைகளிலும் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குப் புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வும், கூட்டு முயற்சியும் அவசியமாகும்.

நோயாளர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்ற சிந்தனை எழுந்தால் அது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து ரையாடி அந்த நிலையை மாற்ற ஒவ்வொருவரும் முயல வேண்டும்

Dr. சி. சிவன்சுதன்
பொதுவைத்திய நிபுணர்

## ஆரோக்கிய கருத்து பகிர்வுகள்!!

- அநாவசியமான மருத்துவப்பாவனைகள் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல
- எமது மருத்துவக் கவனிப்பு முறைகள் எமது பிரதேசம், கலாசாரம், எங்களது வாழ்க்கை முறை சார்ந்ததாகவும் தனித்துவமானதாகவும் பரிணமித்து வருகின்றது.
- நுளம்புச்சுருள்கள் கொழுத்துவது உடல் நலத்திற்கு தீங்கானது.
- ஒரு மருத்துவக்குழுவை விமர்சிக்கும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கிறது. ஆனால் நோயுற்றவரை ஒரு பொதுத்தளத்தில் விமர்சிக்கும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.
- மத சிந்தனைகளும் மருத்துவச் சிந்தனைகளும் ஆரோக்கியத்தின் இரு கண்கள்.
- மருத்துவரை சந்திக்கும் பொழுது உங்களுடைய நோய்கள் சம்பந்தமான முழுத்தகவலையும் கேட்டு அறிந்து கொள்ளும் உரிமையும் கடமையும் உங்களுக்கு இருக்கின்றது.
- உங்கள் மருத்துவப் பதிவேடுகளையும் கிளினிக் புத்தகங்களையும் மட்டைகளையும் அவை பழையனவாக இருந்தாலும் பக்குவப்படுத்தி வையுங்கள்.
- உள்ளூரிலே இயற்கையாக மருந்து தெளிக்காது, செயற்கை உரம் பாவிக்காது வளரக்கூடிய மரக்கறி பயிர்ச்செய்கையை ஊக்குவித்து எம்மவரின் சுகம் வளர்ப்போம். அத்தகைய உணவு வகைகளின் உதாரணங்களாவன- பசளி, வாழைப்பூ, தவசி முருங்கை, முள்ளங்கி, முருங்கை, ஈரப்பலா, கறிவேப்பிலை, கறி வாழைக்காய், சண்டி, தொய்யில், வெண்டி, சுண்டங்கத்தரி, அகத்தி, மரவெள்ளி, கரணை, வல்லாரை போன்றவை

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோய்ப் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதாகச் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நுளம்பு பெருகும் இடங்களை அழிக்குமாறு தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப் பாளர் வைத்தியர் சுதத் சமரவீர பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முதல் அறிவிக்கப்பட்ட நுளம்பு ஒழிப்பு வாரம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 24,815 ஆகவும், டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆகவும் பதிவாகியுள்ளது. (நி-6)

# மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

(வோஷிங்டன்)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

சர்வதேச சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 76.99 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.62 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை சர்வதேசச் சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.58 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (நி-6)

# கறுவா விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

கறுவா விலை மீண்டும் அதிகரித்து வருவதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில், சந்தையில் கறுவாவின் விலையும் உயர்ந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், உயர்தரம் கொண்ட ஒரு கிலோ கறுவாவின் விலை 3000 ரூபாவை தாண்டியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித் துள்ளனர்.

மேலும், மிக உயர்ந்த தரமான கறுவாவை உற்பத்தி செய்யுமாறு கறுவா மொத்த விற்பனையாளர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 300 | 350-420 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 400 | 120 | 250 | 250 |
| தக்காளி | 200 | 200 | 200 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 150 | 120 | 200 |
| கோவா | 250 | 200 | 200 | 200 | 250 |
| கரட் | 250 | 260 | 350 | 250 | 280 |
| பூசணி | 100 | 100 | 120 | 80-100 | 120 |
| புடோல் | 200 | 200 | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 70-90 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 250 | 300-450 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 230 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 800 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 150 | 300 | 60 | 150-220 | 200 |
| லீக்ஸ் | 420 | 450 | 300 | 360 | 450 |
| பீற்றூட் | 400 | 400 | 600 | 300 | 500 |
| கறிமிளகாய் | 200 | 300 | 400 | 200 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 400-700 | 800 |
| போஞ்சி | 600 | 900 | 600 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 100 | 120-140 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 800-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 400 | 200 | 80 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 140 | -- | 120 | 80 | |

# இன்று ஒரு தகவல் 142



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மாரடைப்பு

நேற்று வரைக்கும் நன்றாக பேசிக்கொண்டிருந்தவர்கள் இன்றைக்குத் திடீரென்று காணாமல் போய்விடுகின்றார்கள் சார். என்ன என்று விசாரித்தால் அவர் மாரடைப்பால் இறந்துவிட்டார் என்கிறார்கள். மாரடைப்பு நேயினால் ஏற்படும் மரணம் இப்போது அதிகமாகிக்கொண்டு இருக்கிறது என்பதை வைத்தியர்களே ஒத்துக்கொள்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்? இரத்தத்திலே கொழுப்பு அதிகமாக சேர்வது, புகைப்பிடிப்பது, நுரையீரல் பாதிக்கப்படுவது இது எல்லாம் தான்.

கட்டுப்படுத்தாத நீரிழிவு நோய், உடல் எடை அதிகரிப்பது, சிறுநீரகக் கோளாறு, உயர் இரத்த அழுத்தம் இது எல்லாம் முக்கியமான காரணங்கள். இரத்தத்திலே அதிக கொழுப்பு சேர்ந்தால் இருதய நாளத்திலே அடைப்பு ஏற்படுகிறது. இதனால் தான் மாரடைப்பு ஏற்படுகிறது.

இது இப்படியே போய்க்கொண்டிருந்தால் இந்த நூற்றாண்டு கடைசியிலே இருக்கின்ற மக்களில் பாதிக்குப் பாதிப்பேர் இருதய நோயால் பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது என்று கூறி நிபுணர்கள் பயமுறுத்துகிறார்கள்.

"சரி! அவர்கள் கூறுவதுடன் இருக்கக் கூடாதா? அதை நீ வேற ஏன் சொல்லி பயமுறுத்துகிறாய்?" என்கிறீர்களா? எல்லாம் ஒரு எச்சரிகை தான் சார். வேறு என்ன?

அது எல்லாம் இருக்கட்டும்; இதயநோய் வராமல் இருக்க வேண்டும் என்றால் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அதைப் பற்றி நிபுணர்கள் என்ன கூறுகிறார்கள்? அதைத் தெரிந்து கொள்ளலாம்.

முதலாவது உணவில் கட்டுப்பாடு. கொழுப்பு அதிகமாக இருக்கின்ற உணவு எதுவாக இருந்தாலும் அதற்கு டாட்டா காட்டிவிடுங்கள். மது, புகை இது இரண்டும் வேண்டாம். உப்பைக் குறைக்க வேண்டும். பழம், காய்கறி நல்லது. முடிந்த அளவிற்கு சமைக்காமல் பச்சையாகவே சாப்பிடலாம். திராட்சை, அப்பிள் இது எல்லாம் மிகவும் நல்லது. சூரியகாந்தி எண்ணெயை உபயோகப்படுத்தலாம்.

கொலஸ்ரோலை குறைப்பதற்கு பூண்டு மிகவும் உதவி செய்கிறது. கோபம், பயம், ஏமாற்றம் இது மாதிரியான மன உணர்வுகள் ஏற்படுத்துகின்ற சங்கடங்கள் இரத்தத்தில் உள்ள கொழுப்பையும் கொலஸ்ரோல் அளவையும் உடனடியாக அதிகப்படுத்தி விடுகிறதாம்.

முன்னெச்சரிக்கையாக எல்லோரும் உடற்பயிற்சி செய்வது நல்லது. நடப்பது, நடந்து கொண்டே ஓடுவது, கயிறு தாண்டுவது, நீந்துவது, சைக்கிள் ஓடுவது, குதிரை சவாரி இவற்றில் எது உங்களால் முடியுமோ அதை செய்யுங்கள் போதும். முடியாததை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டாம்.

50 வயதிற்கு மேலே கயிறு தாண்டுகிறேன் என்று சொல்லிக் கொண்டு கால் தடக்கி குப்புற விழுந்துவிட்டு பின் என்னைத் திட்டாதீர்கள். அல்லது குதிரைச் சவாரி செய்யச் சென்னேன் என்பதற்காக குதிரையைத் தேடிக் கொண்டு அலையாதீர்கள். நடந்தால் போதும் அது ஒரு நல்ல பயிற்சி. நுட்பமான வேலைகளை உட்கார்ந்து செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் உடற்பயிற்ச்சி தேவை.

லண்டனில் J.N. மாரீஸ் என்று ஒரு வைத்தியர். அவர் ஒரு கணக்கு எடுத்துப் பார்த்துவிட்டு கூறினார், தபால் பிரிப்பவர்களை விட தபால் கொடுப்பவர்களுக்கு மாரடைப்பு குறைவாக இருக்குமாம். அதனாலே யாராவது அலைவது போல் அல்லது நடப்பதைப் போல் உள்ள வேலையிலே இருந்தால் அவர்கள் எல்லாம் அலுத்துக் கொள்ள வேண்டாம். உற்சாகமாக இருங்கள்.

கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்த மூலிகை வைத்தியம் சில வழிகள் சொல்கிறது. அறுகம்புல் அரைப்பிடி, 10 மிளகு இது இரண்டையும் சேர்த்து அரைத்து தண்ணீர் கலந்து தினமும் காலையில் அருந்தி வரலாம்.

முள்ளங்கி, வாழைத்தண்டில் அவியல் செய்து வாரத்திற்கு இரண்டு நாள் இரண்டு கப் அளவிற்கு சாப்பிடலாம். முருங்கை இலைச்சாறு அல்லது பூண்டு சேர்த்த மிளகு ரசம் வாரத்திற்கு மூன்று நாள் சாப்பிடலாம்.

வெந்தயம் கொஞ்சம், சீரகம் கொஞ்சம், மஞ்சள் பொடி இரண்டு சிட்டிகை, துளசி இலைச்சாறு 1 ஸ்பூன் இவற்றைக் கலந்து தினம் ஒரு வேளை சாப்பிடலாம். பார்லி, கொள்ளு, புதினா இதிலே ஏதாவது ஒன்றில் சூப் செய்து உப்பு இல்லாமல் ஒரு குவளை குடிக்கலாம். இஞ்சிச்சாறு, மிளகு, எலுமிச்சம்பழச்சாறு, தேன் இவற்றைக் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். இப்படி நிறைய வைத்தியம் இருக்கிறது. உடம்பு, மனது இது இரண்டையும் நன்றாக வைத்துக்கொண்டால் எந்த வியாதியும் கிட்ட நெருங்காது. அதிர்ச்சியான விடயங்களுக்கு மனதிலே இடம் கொடுக்கக் கூடாது.

ஒருவர் வீட்டிலே எப்போதும் கொழுப்பு, எண்ணெய் இல்லாமல் உணவே கிடையாது. அந்த அம்மாவிற்கு எண்ணெய் தாராளமாக ஊற்றாமல் சமைக்கவே வராது. வீட்டுக்காரருக்கு மாரடைப்பு வந்துவிட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியர் வைத்தியம் செய்தார். இரண்டு நாள் கழித்து வைத்தியர் அவரிடம், "சார் இப்போது தான் நீங்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டியிருக்கிறீர்கள்" என்றார்.

இதற்கு இந்த நோயாளி, "இரண்டு நாளைக்கு முன்னே தாண்டிவிட்டேனே" என்றார். எப்படி? என்று கேட்டார் வைத்தியர். வீட்டை விட்டு வெளியே வந்ததைச் சொன்னேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரகாளி அம்பாள் துணை
# வடமராட்சி பொலிகண்டி மருதாம்புலம் திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2024


**பூந்தென்றல் போலவரும் காளி யம்மா - தாயே**
**புயலாகி - வந்ததுண்டு காளியம்மா**
**சேர்ந்தொன்றாய் அழைக்கின்றோம் காளியம்மா**
**- எங்கள்**
**கிராமத்தை காத்திடுவாய் காளியம்மா**

ஆரம்ப காலத்தில் பிரபஞ்சத்தில் மாதாசக்தி தெய்வ சக்தியாக ஆறு, குளம், விருட்சம் போன்ற இடங்களில் வியாபித்து திவ்விய ஒளிமூலமாகவும், அசரீரி மூலமாகவும் தனது தெய்வீகத் தன்மையை வெளிக்காட்டி அடியவர்களுக்கு அருள்பாலித்துள்ளார். ஆரிய கலாச் சாரம் தொடங்க முன்னரே சக்தி வழிபாடுகள் இருந்ததாக வரலாறு சான்றுகள் கூறுகின்றன. இந்த வகையில் ஈழத்திரு நாட்டின் திலகமாய் விளங்கும் யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் பொலிகண்டி கிராமத்திலே மிகவும் பழமைவாய்ந்த இந்து ஆலயங்கள் பல உள. அவற்றிலே இவ்வூருக்கு சிறப்பாய் மத்தியில் அமையப் பெற்ற ஆலயமே பொலிகண்டி மருதாம்புலம் பத்திரகாளி அம்மன் ஆலயமாகும்.

அதிவீரசிங்க முதலியார் சந்ததியினராகிய வேலாயுதர் என்பவருடைய மகன், கந்தர் அவருடைய மகன் வேலுப்பிள்ளை அவருடைய மகள் தங்கம்மா என்பவர்களுக்கு சொந்தமான அதிவீரசிங்க முதலியார் தோம்புக்காணி மருதாம்புலத்தில் இற்றைக்கு 364 ஆண்டுகளுக்கு முன்னர் நின்ற ஓர் பெரிய இலுப்பை மரத்தடியில் திவ்விய ஒளிப்பிளம்பு அடிக்கடி தோன்றி தரிசனம் கிடைக்கப்பெற்ற அன்பர்களுக்கு விளக்கு ஏற்றி ஆதரிக்குமாறு சொர்ப்பனம் மூலமாகக் காட்சி கொடுக்க மக்களும் இறைவன் திருக்குறிப்பை உணர்ந்து விளக்கேற்றி வழிபடத் தொடங்கினர். காலப் போக்கில் அன்னையின் அருளாட்சி இவ் வூர் மக்களுக்கு வெளிப்படையாக கிடைக்கப்பெற்றதால் காலவோட்டத்தில் சிறு குடிலமைத்து சூலம் வைத்து பொங்கல் பொங்கி வழிபாடாற்றி நேர்த்திகளையும் செய்து வந்தனர். பத்திரகாளி அனுக்கிரகம் காலவோட்டத்தில் வியாபித்து இக்கிராமம் மட்டுமல்லாது ஏனைய கிராமங்களுக்கும் கிடைக்கப் பெற்றது. காலப்போக்கில் தெய்வீகத் தன்மையினால் அடியவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சுண்ணாம்பு கற்களினால் ஒரு சிறிய ஆலயம் அமைத்து அம்பாளின் திருமுகத்தையும் சூலத்தையும் வைத்து கிராமிய வழிபாட்டு முறைக்கு அமைவாக சிதம்பரப்பிள்ளை - செல்லையா ஐயர் ஆற்றி வந்தார். இவ்வாலயம் பூலோக கற்பக தரு என்று சொல்லப்படுகின்ற பனைகளைக் கொண்ட சூழலில் அமைந்திருந்தது. காலத்திற்கு காலம் தெய்வீகத் தன்மையின் சிறப்பினால் ஆலயம் மிகவும் பிரபல்யம் பெற்று வந்தது. இவ்வாலயத்தின் அருகாமையில் வாழ்ந்து வந்த சன்னாசி கந்தையா ஸ்வாமியார் என்பவர் அம்பாளிடத்தே அளவுகடந்த பக்தி கொண்டதனால் அம்பாளின் திருவருள் பிரபாகம் அவர் மீது வியாபித்து அடியவர்களுக்கு கட்டுச் சொல்லுதல், நோய்களுக்கு மருந்து செய்தல் போன்ற தெய்வீகத் தன்மைகளை ஆற்றி வந்தார்.

மேற்படி ஆலய பூசகர் காலவோட்டத்தில் வயோதிபம் ஏற்பட்ட போது இவருடைய கடமைகளிற்கு இவ் வூரில் வாழ்ந்த க.ஆ.கனகசபாபதி தேசிகர் அவர்கள் பூசைப் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வந்தார். காலவோட்டத்தில் தெய்வீகத்தன்மை சிறப்பு நோக்கியதாய் எமது கிராமத்தில் உள்ள கந்தவனக்கடவை முருகப்பெருமான் மானப்பூ உற்சவத்திற்காக இங்கு எழுந்தருளுவார். மேலும் பொலிகண்டி இருப்பைமூலை பிள்ளையாரும் இங்கு வந்து வேட்டையாடிச் செல்வது வழமை. இத்தினங்களில் அம்பாளுடைய ஆலயம் கோலாகலமாக இருக்கும்.

காலம் பல கடந்து சுண்ணாம்புக் கல்லால் அமைக்கப்பட்ட ஆலயம் பழுதடைந்திருந்தமையால் இளமையில் இருந்தே அம்பாளிடத்தே அன்புடையாயிருந்த திருமதி நாகலிங்கம் தங்கம்மாவின் கனவிலே காட்சி கொடுத்து அம்பாள் தனக்கு ஓர் ஆலயம் புதிதாக அமைக்குமாறு தெய்வீகத்தன்மையால் உணர்த்தியதன் பேறாக அம்பாள் ஆலயத்தைச் சிறப்பாக அமைக்க 1960 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பின் பழைய சுண்ணாம்புக்கல் கோயில் இடித்து அகற்றி புதிய ஆலயத்திற்கு அத்திவாரம் இட்டனர். அத்தருணம் பூசைக் கடமைகளை எமதூரில் வாழ்ந்த பிரம்மஸ்ரீ சந்தானராமசர்மா ஐயா (மாப்பிள்ளை ஐயா) என்பவரிடம் பூசைப் பொறுப்புக்களை ஒப்படைத்தார்கள்.



மூலஸ்தானத்தையும் அதனுடன் இணைந்த அர்த்த மண்டபத்தையும் மூலவிக்கிரகம், எழுந்தருளி விக்கிரகம், சிம்மபலிபீடம் ஆகியவற்றை திருமதி நாகலிங்கம் தங்கம்மா அவர்களின் உபயமாகவும், மகாமண்டபத்தை செல்லப்பா தம்பிராசா அவர்களின் உபயமாகவும், தரிசன மண்டபத்தை V.K.B வேலும்மயிலும் அவர்களின் உபயமாகவும், தம்ப மண்டபத்தை பொது உபயமாகவும் வைரவரை கிருஷ்ண பிள்ளை மகேஸ்வரி உபயமாகவும், தீர்த்தக் கிணற்றினை வாரித்தம்பி சின்னையா அவர்கள் வெட்டினார். அத்துடன் மடப்பள்ளியை உபயமாகவும் கட்டினார். மணிக்கூட்டு கோபுரத்தை வதிரி திருமதி நடராஜா தங்கமணி அவர்களின் உபயமாகவும், சுற்றுமதில், வாகனசாலை, களஞ்சியம் ஆகியவற்றை திருமதி நாகலிங்கம் தங்கம்மாவின் உபயமாகவும் செய்தார்கள். இப்படியாக திருப்பணிகள் நடைபெற்று 1977 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சுவாதி நட்சத்திரத்தில் முதலாவது கும்பாபிஷேகம் எமதூர் குரு பரம்பரையில் வந்தவரும் பொலிகண்டி கந்தவனக்கடவை பிரதமகுருவுமான சிவப்பிரம்மஸ்ரீ க.சோமசுந்தரக் குருக்கள் ஐயா தலைமையில் மாவை ஆதீனத்தைச் சேர்ந்த சிவப்பிரம்மஸ்ரீ ஐ.வைத்தியநாதக் குருக்கள் அவர்களால் செய்து வைக்கப்பட்டது. இக் கும்பாபிஷே கத்தில் மூலஸ்தானத்தில் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட நின்ற கோலத்திலான அம்பாள் விக்கிரகத்தையும், அது போலவே ஐம்பொன்னிலான உற்சவ மூர்த்தியையும், ஐம்பொன்னாலான வைரவரையும், கருங்கல்லினாலான விநாயகர், சிம்ம, பலிபீடம் ஆகிய மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்தனர்.

இந்த கும்பாபிஷேகத்தில் திருமதி நாகலிங்கம் தங்கம்மா அவர்களுடன் பெரியதம்பி அருணாசலம் அவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் கும்பாபிஷேகத்தின் போது திரு.சு.நாகலிங்கம் ஆசிரியர் அவர்களுடன் அவர்களுக்கு உதவியாக அன்பர் திருவாளர் தம்பிராசா அப்பா அவர்களையும் மறந்து விட முடியாது.

இந்த கும்பாபிஷேகம் முதல் சமயக் கிரியைகள் ஆகமமுறைப்படி நடைபெற்று நித்திய பூசையுடன் சிவராத்திரி பங்குனித்திங்கள், வைகாசி விசாகப் பொங்கல், ஆடிப்பூரத்தை தீர்த்தமாகக் கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவங்கள் இடம்பெற்று வந்தன. 1978 ஆம் ஆண்டு வைகாசி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் விநாயகப் பெருமான் இல்லாத குறையை திருவாளர் வைரமுத்து நடராஜாவும் திருமதி இராசலட்சுமி அவர்களும் விநாயகப் பெருமானுக்கு கோயில் அமைத்து கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். 1982 ஆம் ஆண்டு திரு.இராசா தங்க வேலாயுதம் அவர்களின் முயற்சியால் ஆடி மாதம் பொதுமக்கள் உபயமாக வசந்த மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு சண்டேஸ்வரி உற்சவ மூர்த்தி திரு.கி.அருள்நாதர் என்பவரின் முயற்சியால் பொது மக்களின் பங்களிப்புடன் செய்யப்பட்டது. ஆடிப்பூர நன்னாளில் அம்பாள் கந்தவனக்கடவை சமுத்திர தீர்த்தமாடி பொலிகண்டி சல்லியம்பதி விநாயகர் ஆலயத்தில் பொலிகண்டி குருகுல மக்களால் நடாத்தப்படும் விஷேட பூசைகளை ஏற்று கந்தவப் பெருமானின் ஆலயத்திற்கு சென்று அங்கு நடைபெறும் வழிபாடுகளை ஏற்று மீண்டும் தனது ஆலயத்தினை நோக்கி செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

1977 ஆம் ஆண்டு முதல் 2005 வரை நடைபெற்ற கும்பாபிஷேக மணவாளக் கோல உபயத்தை திருமதி. நாகலிங்கம் தங்கம்மா குடும்பத்தினரே செய்து வருகி ன்றனர். ஏறத்தாழ 28 ஆண்டுகள் கடந்தமையாலும் சில கட்டடங்கள் சிதைவுற்றமையாலும் ஆலய பரிபாலன சபையினர் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்ய எண்ணி 2005 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அடியவர்கள் எல்லோ ரும் ஒன்றிணைந்து இவ்வூர் மக்களு டன் புலம்பெயர்ந்து வாழும் இவ்வூர் மக்களும் பங்களித்து தற்போது அமைந்துள்ள ஆலயம் சிறப்புற அமைய ஊன்றுகோலாக இருந்தது.

விநாயகருக்கு துவிதள (சுந்தர) விமானம் மாவடிவளவு தம்பிராசா இராசம்மா குடும்பத்தினர் உபயமாக அமைத்தனர்.

மூலஸ்தான திருப்பணியை திரிதள விமானத்தை கொண்டதாகவும் இரட்டைப் பஞ்சாங்க வேலைப்பாடுகளுடன் அழகுற திரு.திருமதி சிவநாதன், பத்திராதேவி குடும்பம், திரு.சி.சங்கர் குடும்பம், திரு.சி.சிவரூபன் குடும்பம், திரு.நா.விவேகானந்தன் குடும்பம், திரு.வி.சபேஷ் குடும்பம் ஒன்று சேர்ந்து செய்தார்கள். அர்த்த மண்டபத்தினையும் இவர்களே ஒன்று சேர்ந்து அமைத்தனர்.

நவீன சிற்ப முறையில் அமைந்த மஹா மண்டபம், மகா மண்டபதேவ சபையை காசிநாதர் தெட்சணாமூர்த்தி குடும்பத்தினர் அமைத்தனர். துவிதள (சுந்தர) விமானம் கொண்ட மஹா லக்ஷ்மியை திரு.சி.சிவபாதம், திரு.சி.சிதம்பரநாதன் குடும்பத்தினர் அமைத்தனர். தெட்க்ஷணா மூர்த்தியை பாலா வித்தெரு தங்க வேலாயுதம் சௌந்தரி அம்மா குடும்பத்தினர் அமைத்தனர்.

முருகன் சந்நிதானம் பாலாவித்தெரு அழகராசா இராஜேஸ்வரி குடும்பத்தினர் அமைத்தனர். எங்கும் இல்லாத முறையில் நவக்கிரக புஜப பத்ததியின் பிரகாரம் ஒன்பது நவக்கிரகங்களும் அவர்களது தேவியருடன் தமிழ் நாடு மகா வல்லிபுர சிற்ப கலாசாலையில் இருந்து தருவிக்கப்பட்ட நவக்கிரகத்தை வாரியப்புலம் செ.கிருஷ்ணபிள்ளை தங்கம்மா குடும்பத்தினர் அமைத்தனர்.

வசந்தமண்டபத்தை "சட்டம்பியர் வளவு" கொற்றாவத்தை குடும்பத்தினர் அமைத்தனர். தம்ப மண்டபத்தினை சைவகுருமார் குடும்பத்தினர் அமைத்தனர்.

சண்டேஸ்வரி சந்நிதானத்தை ஆறுமுகம் இராசம்மா குடும்பத்தினர், ஒதியடிவளவு அமைத்தனர். இரண்டாவது மணிக்கூட்டு கோபுரத்தை கொற்றாவத்தை திரு.மாணிக்கம் காசிலிங்கம் குடும்பத்தினர் அமைத்தனர்.

மேலும் ரம்மியமான துவாரபாலகிகளுடனும், கோபுரவாசலுடன் கம்பீரமாக காட்சி அளிக்கும் வில்லு மண்டபத்தை கிளானை செல்லக்கண்டு வள்ளிநாயகி (திரு, திருமதி விநாயகலிங்கம்) குடும்பத்தினர் அமைத்தனர். அத்துடன் விநாயகலிங்கம் கலாரஞ்சனி தம்பதிகள் அம்பாளுடைய சித்திரத் தேரையும் தேர்முட்டியையும் செய்தனர். இப்படியாக மிகவும் தெய்வீகத் தன்மை பொருந்திய பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் இரண் டாவது கும்பாபிஷேகம் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று அவிட்ட நட்சத்திரத்தில் குமர குருமணி சிவப்பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்களால் நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நடந்தேறியது.

மீண்டும் 2024.02.11 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்ட எம்பெருமாட்டியின் ஆலயம் வர்ண வேலைப்பாடுகளை மீளமைக்கப்பெற்று 03.06.2024 நாளை திங்கட்கிழமை புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற அம்பாளின் திருவருள் பாலித்துள்ளது.

**சர்வ ஜனகா சுகினோ பவந்து**
**அம்பிகையின் ஆலய அருட்பணியில்**
**ஆலய பரிபாலன சபையினர்**

**அனுசரனை வழங்குவோர்**
ஜெயா மணப்பந்தல் சேவை, பொலிகண்டி. 0779944478
தரன் சவுண்ட், பொலிகண்டி 077 077 4540
தங்கம்மா நாகலிங்கம் மண்டபம், பத்திரகாளி கோவில்
(சி-1048)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்து கொண்டால் போதும். அதனைக் கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். – ஹேராம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மன்னா வேண்டாம் என்றே ஒரு குரல் மன்னனைத் தடுக்கிறது

இரண்டு தாய். ஒரு குழந்தை. வழக்கு மன்னன் சாலமனின் சபைக்கு வருகிறது.

இரண்டு பேரும் குழந்தை தம்முடையதென் கின்றனர். மன்னன் திகைத்துப் போகின் றான்.

ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள் இருக்க முடியும். ஆனால் இரண்டு தாய்க்கு ஒரு குழந்தை எப்படிச் சாத்தியமாகும்.

யாரோ ஒருவர் பொய் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்கின்றான் மன்னன் சாலமன்.

இந்தப் பிணக்கை எப்படித் தீர்ப்பது. இரண்டு தாய்மாரும் குழந்தை தம்முடைய தென்று வாதிடுவதால், குழந்தையை ஆளுக் குப் பாதியாகக் கொடுக்கலாம் என்று கூறிய, மன்னன் சாலமன் குழந்தையை நோக்கி வாளை ஓங்குகிறான்.

அந்தோ! ஒரு தாய் மன்னா! வேண்டாம் என்று மன்னனைத் தடுக்கின்றாள்.

தாய்ப்பாசம் மன்னனைத் தடுக்கிறது. உண்மைத்தாய் யார் என்பதை மன்னன் சாலமன் இனங்கண்டு அந்தத் தாயிடம் குழந்தையை ஒப்படைக்கின்றான்.

இங்கு மன்னன் சாலமன் குழந்தையை வெட்ட வாளை ஓங்கினான் என்று யாரேனும் குற்றம் சுமத்துவார்களாயின், அதைவிட்ட அபத்தம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஆம், குழந்தையை ஆளுக்குப் பாதியாகக் கொடுக்கலாம் என்று வாளை ஓங்கும்போது, பெற்ற தாய் நிச்சயம் பதறுவாள்.

குழந்தையைப் பாதுகாக்கத் துடிப்பாள். அதனாலேயே மன்னன் சாலமன் அப்படி யொரு நுட்பத்தைக் கையாண்டான்.

ஆக, கையாளுகின்ற நுட்பம் குறித்து விமர்சிப்பது எந்த வகையிலும் பொருத்த மற்றது.

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு என்பது இன் னொரு பிரச்சினையை ஏற்படுத்துவதாக இருந்துவிடக்கூடாது.

இங்குதான் நம் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஆம், தமிழ் மக்கள் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்ற கருத்து முன்வைக் கப்படுகிறது.

தமிழ் மக்கள் தங்களின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு முன்வைப்பதற்கு இது அவசியமாகிறது என்ற வாதம் ஏற்புடையது.

இங்குதான் இரண்டு முக்கியமான கேள்வி கள் எழுகின்றன.

அதில் ஒன்று; தமிழ் பொது வேட்பாளரை ஏற்று அனைத்துத் தமிழ் மக்களும் வாக் களிப்பார்களா? அவ்வாறு வாக்களிக்க வைப் பதற்கான பொறிமுறை என்ன? என்பது.

மற்றையது, தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்குத் தமிழ் மக்கள் வாக் களிக்கும் போது, மிக மோசமான – இனத்து வேசமிக்க சிங்களவர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமாட்டார் என்பதற் கான உத்தரவாதம் ஏதேனும் உண்டா? என்பது.

ஆக, அரசியல் பயணத்தில் தனித்து நேர்ப் பார்வை மட்டுமல்ல. திரும்பிப் பார்ப்பதும் மிகவும் அவசியமானதென்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்தால் அரசாங்கத்திலிருந்து விலகுவோம்

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர் தலை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க முயற்சிப்பாரா யின் அரசாங்கத்தில் இரு ந்து விலகவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள் ளது.

நெலும் மாவத்தை யில் உள்ள கட்சி அலு வலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அந்த கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரிய வசம் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றை 2 ஆண்டுக ளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார யோசனை ஒன்றை முன்வைத்திருந் தார்.

இந்த நிலையில் தேர் தலை பிற்போடுவதற்கு தங்களது கட்சி ஒத்துழை ப்பு வழங்காது என, ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரிய வசம் தெரிவித்துள் ளார்.

அத்துடன் கட்சி என்ற ரீதியில் தங்களது தரப் பினர் குறித்த யோசனை க்கு எதிர்ப்பை வெளியிட்டு ள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (நி-6)

## கணவன் மனைவி இருவரையும் தாக்கி நகை, பணம் கொள்ளை

### உடுப்பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வியாபார நடவடிக்கை களை முடித்து விட்டு வீடு திரும்பிய வர்த்தகரை, வீட்டிற்கு அருகில் வைத்து தாக்கி ஒரு தொகை பண த்தை கொள்ளையிட்டது டன் குறித்த வர்த்தகரின் மனைவியை தாக்கி அவ ரது நகைகளையும் கொள் ளையடித்து தப்பி சென்று ள்ளனர்

யாழ்.உடுப்பிட்டி பகு தியில் நேற்று சனிக்கி ழமை அதிகாலை நடை பெற்ற இச் சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த 42 வயதுடைய குணசிங்கம் சந்துரு என்பவரே தாக்கு தலுக்கு இலக்காகியுள்ளார்

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது குறி த்த நபர் தனது வியாபார ங்களை முடி த்துக் கொண்டு , வீடு திரும்பிய வேளை வீட்டிற்கு அருகில் மறைந்திருந்த கொள்ளை கும்பல் அவர் மீது தாக் குதலை மேற்கொண்டு அவரது வியாபார பணத் தினை கொள்ளையடித்த வேளை சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே ஓடி வந்த வர்த்தகரின் மனைவி மீதும் கொள்ளை கும்பல் தாக்கு தல் நடத்தி அவரது நகை களையும் கொள்ளைய டித்து தப்பி சென்றுள்ள னர்.

தாக்குதலுக்கு இலக் கான குடும்பஸ்தர் படுகா யமடைந்த நிலையில் பரு த்தித்துறை ஆதார வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ள னர். (நி-6-33)

## நயினாதீவு-குறிகட்டுவான் படகுச் சேவையில் நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு குறிகட்டு வான் படகுச்சேவை நேற் றுத் தொடக்கம் புதிய நேர அட்டவணையில் இயங் கும் என வேலணை பிர தேச சபை நயினாதீவு உப அலுவலகத்தின் பொறுப்ப திகாரி வெளியிட்டுள்ளார்.

நயினாதீவு - குறிகட்டு வான் இடையேயான பட குச் சேவை காலை 6.30 முதல் மாலை 5.30 மணி வரை ஒவ்வொரு 30 நிமி டத்துக்கும் ஒரு படகு புறப்படும்.

மற்றும் குறிகட்டுவான் - நயினாதீவு இடையே யான படகுச் சேவை காலை 7 மணி முதல் மாலை 6.30 மணிவரை ஒவ்வொரு 30 நிமிடத்து க்கும் ஒரு படகு புறப்படும் என கூறப்பட்டுள்ளது.

நயினாதீவு நாக பூஷணி அம்பாளின் வரு டாந்த மஹோற்சவம் எதிர் வரும் 7 ஆம் திகதி வெள் ளிக்கிழமை கொடியேற்ற த்துடன் ஆரம்பமாகவு ள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-6-33)

# பரமபிதா காட்டிய பாதை

## இரத்தம் சிந்துதல் இன்றி பாவ மன்னிப்பு இல்லை

இயேசு திருவுடலை யும்,இரத்தத்தையும்நமக்கு உணவாகத்தருவதை நாம் பெருவிழாவாகக் கொண்டா டுகிறோம். உடல் என்பது ஒருவரது ஆளுமையின் வெளிப்படையான கூறு. மனம், ஆன்மா, உணர் வுகள் என்பவை வெளியில் தெளிவாகக் காணக்கிடை க்காத ஆளுமையின் தளங் கள். ஆனால், உடல் மட் டுமே அனைவருக்கும்வெளி ப்படையான தளம். அது மட்டுமல்ல, உடல்தான் இறைவனுக்கு அர்ப்பண மாக்க சிறந்த தளமும்கூட. அதனால்தான், இயேசு தம் உடலை நமக்காக கைய ளித்தார். இரத்தம் உயிரின் ஆதாரம். இரத்தம் சிந்துதல் தியாகத்தின் அடையாளம். எமக்காக தன்னை கைய ளித்த இயேசுவின் உடலு க்காக, இரத்தத்துக்காக நாம் நமது உடலையும் இறை வனின் திருவுளத்தை நிறை வேற்றக் கையளிப்போம். நாம் இரத்தத்தைச் சிந்தா விட்டாலும், பிறர் வாழத் தியாகங்கள் செய்ய முன் வருவோம்.

“இயேசுவின் திருஉடல் திருஇரத்தப் பெருவிழாவின் [illegible] [illegible] கத்தோலிக்க குருவானவர் தன் அழைத்தலைப்பற்றி பல்வேறு கேள்விகளோடு திருப்பயணியாக உரோமை நகர் நோக்கி பயணமா னார். பயணத்தின் பாதி வழியில் உரோமையிலி ருந்து 70கி.மீ தொலை விலுள்ள போல்சேனா என்ற இடத்தில் புனித கிறிஸ் தினால் அடக்கம் செய்ய ப்பட்ட இடத்திலுள்ள பீடத்தில் திருப்பலியாற்றினார். அப் பொழுது அர்ச்சிப்பு வார்த் தையைச் சொல்லி அப்ப த்தை உயர்த்தியவுடன் அது சதையாக மாறி இர த்தம் கசியத் துவங்கியது. இரத்தம் பீடத்தில் மேலுள்ள கார்ப்பரோல் என்ற விரிப்பு துணிமீது படிந்தது. இந்த நற்கருணை அற்புதத்தி ற்குப் பிறகு1264ம் ஆண்டு திருத்தந்தை நான்காம் அர்பன் இயேசுவின் திரு உடல் திருஇரத்த திரு விழாவை துவங்க கட்ட ளைப் பிறப்பித்தார்.

இதனைவிட இன்னும் சில உண்மைகள்: 1431ல் இங்கிலாந்தில் புனித ஜேர்ன் ஆப் ஆர்க் சிறையில் நெருப்பில் இடப்படுவதற்கு முன்பாக அவரது ஆசைக்கு [illegible] கடைசி [illegible] திருந்தாக என்ன வேண்டும் என்று கேட்கப்பட்டபோது அவர் கூறியது: “நற்கருணை வேண்டும்” என்றதுடன் காரணம் எந்த திருவிருந்து எனக்கு தொடர்ந்து பலம் தந்து என்னோடு இருந்து என்னைத் தொட்டதோ அதுவே நிரந்தர துணை-பலம் பிரசன்னம் என்றார்.

பாத்திமாவிலிருந்து சிறிதுதொலைவிலுள்ள பல சார் என்ற இடத்தில்1904ல் பிறந்து 1955ல் இறந்த அலெக்சாண்டிரியா என்ற பெண் ஒரு விபத்தான சூழ் நிலையில் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருந்து 13 ஆண்டுகள் நற்கருணை மட்டுமேபெற்று வாழ்ந்தது மருத்துவர்களை ஆச்சரி யப்படுத்தியுள்ளது என் பதும் வரலாற்றில் பதிவா கியுள்ளது. விசுவசித்தால் திருவிருந்து தொடர்ந்தும் நம்மை தொடும்.

அண்மையில் மரியா என்ற14வயது இளம்பெண் 8மாதங்களாக காத்திருந்து இருதயமாற்று அறுவைச் சிகிச்சைவழியாக புதிய இதயம் பெற்றாள். அவள் பல நாட்கள் பெற்றோரோடு நற்கருணை திருவிருந்தை தேடிவரக்காரணம் என்ன என்று கேட்டபொழுது, எங்க ளின் தொடர்விருந்து எங் களை இப்புதிய இதயத்தின் வழியாகத் தொடும் நற் கருணை இயேசு எங்களு க்குத் தினமும் வேண்டும். அவர் தான் நிரந்தர சக்தி என்றார்கள். புனித பீட்டர் ஜீலியன் நாம் நற்கருணை இயேசுவால் ஆட்கொள்ள ப்படவேண்டும் நாம் திரு விருந்தில் அவரை ஆட் கொள்ள வேண்டும் என் றார்.

இயேசு தமது இராப் போசனத்தின்போது அப்ப த்தையும் இரசத்தையும் தமது உடலும் இரத்தமும் எனக்கூறி அதனைத் தம் சீடர்களுக்குப் பகிர்ந்தளிக் கிறார். அப்பம் ஏந்தும் சந் தர்ப்பத்தில் பகிர்தலின் ஞாபகம் நமக்குணர்த்த ப்படுகிறது. அப்போது எம் மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறதா என நாம் சிந் திக்க வேண்டும். “இரத்தம் சிந்துதல் இன்றி பாவ மன் னிப்பு இல்லை”. இத்தகைய சிந்தனைகள் ஏற்படுத்தும் மாற்றமே இப்பெருவிழாவை அர்த்தமுள்ளதாக்கும்.

ம.பிரான்சிஸ்க் - கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீரில் அதிக குளோரின் மக்கள் அசௌகரியம்

(அக்கராயன்)

கிளிநொச்சியில் இருந்து பூநக ரிக்கு விநியோகிக்கப் படுகின்ற குடிநீரில் அதி களவு குளோரின் மணம் வீசுவதன் காரணமாக குடி நீரனை அருந்துவதில் பொது மக்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டு ள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் நெருக்கடி மிகுந்த பிரதேச மாக பூநகரி காணப்படுகின்றது. கடல் நீர் உட்புகுந்தமை, நன்னீர் மூலகங்கள் பெருமளவில் உவ ராக மாறியதன் காரணமாக கடந்த காலங்களில் முக்கொம்ப னில் இருந்தும் பரந்தனில் இருந்தும் பிர தேசசபை, பிரதேச செயலகம் குடிநீரினை விநியோ கித்து வந்த நிலையில் தற்போது கிளி நொச் சியில் இருந்து நீரக் குழாய் மூலம் குடிநீர் பூநகரிக்கு விநி யோகி க்கப்படும் நிலையில் குளோரின் மணம் காரணமாக பொதுமக்கள் நெருக்கடிகளை எதிர் கொண் டுள்ளனர். (நி-6-350)

# யானை தாக்கியதில்

## படுகாயமடைந்தவர் மருத்துவமனையில்

(அக்கராயன்)

முல்லைத்தீவு- புத்து வெட்டு வான் மருதங் குளம் பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் மரு த்து வமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மல்லாவியில் இருந்து மோட் டார் சைக்கிளில் கிளி நொச்சி நோக்கி வருகை தந்து திரும்பும் போதே குட்டியுடன் பயணித்த யானை ஒன்றே அந்த நபரை தாக்கியதுடன் மோட்டார் சைக் கிளையும் சேதப்படுத்தி யுள்ளது.

யானையால் தாக்கப்பட்டு படு காயமடைந்த நபரை புத்து வெட்டு வான் கிராம மக்களினால் மல் லாவி ஆதார மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (நி-6-350)

# மரண அறிவித்தல்

## திரு.லயன் பொன்னையா கதிரமலை



தோற்றம் 1929.12.19 மறைவு 2024.05.31

புதுவளவு, நெல்லியடி, கரவெட்டியை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன்.பொன் னையா கதிரமலை அவர்கள் (31.05.2024) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான பொன்னையா - தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சுப்பிர மணியம்- சின்னாச்சி தம்பதி யினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவக்கொ முந்து அவர்களது பாசமிகு கணவரும் சூரியகுமாரன், காலஞ்சென்ற புஷ்பலோஜனி, காலஞ்சென்ற சந்திரகுமாரன், உதயகுமாரன், நந்தகுமாரன், மீனலோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சாந்தினி, சிவானந்தன், காலஞ்சென்ற சித்திரா, சரஸ்வதி, யசோதா, சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகிலன்- சிவசோபிதா, ருஷாந்தன்- ஜனனி, ராகுலன்-ஜனனி, கபிலன்-சுகி, ஹரிகிருஷ்ணி, விஜீவன்-மௌலினி, சொருபி, சீத்தா, வித்யா, திவ்வியன் -காயத்திரி, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் அஷ்வினா, அனிருதா ஹர்ஷிகா, ஹனித்ரா, கவிஷன், கஜானி, விஷ்வா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (சி-503)

புதுவளவு, நெல்லியடி, கரவெட்டி.

தகவல்:- குடும்பத்தினர்
021 226 4534
075 311 2086

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3133

### சுஜீபா

அண்ணா எனக்கு ரொம்ப நாளா ஒரு டவுட்டு அண்ணா



கடிகாரம் கண்டு பிடிக்கும் போது எதை பார்த்து சரியான நேரம் வைத்திருப்பார்கள்

### சாளின்


நாம இல்லாத இடத்துல நம்மள பத்தி பேசுவாங்கள் என்றால்



ஒன்று நாம பிரபலாம இருக்கனும் இல்லை என்றால் நாம் அவர்களுக்கு பிரச்சினையாக இருக்கனும்

### சுரதா

சந்தோசம் என்பது றோட்டில் கிடைக்கும் பணம் மாதிரி



எடுத்தவன் என்ஜோய் பண்றான் தொலைச்சவன் பீல் பண்றான்

### டியாரா

இவ்வளவு வயிற்று வலியோட வந்திருக்கிறாய் துணைக்கு மனைவியை கூட்டிற்று வந்திருக்கலாமே?



ஏன் டாக்டர் வயிற்று வலி போதாதா? கூடவே தலைவலியையும் கூப்பிட்டு வரனுமா என்ன?

### சுதனா

பணமும் ஒரு சுயநலவாதி தான்!!!

பணக்காரனிடம் உள்ள பொழுது "குட்டி" போடுது!!!

ஏழையிடம் வரும் பொழுது "வட்டி" போடுது!!!

### மேவின்

மனைவிக்கு பிடித்த மாதிரி நடந்து கொள்வது எப்படி என்று கூகுளில தேடினால், நெட்டு கட்டாகிற்று "இன்டர்நேஷனல்" பிராப்ளம் போல!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலோலியில்...

சம்பவமொன்று காந்தியூர் புலோலி வட மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த அன்னலட்சுமி இராமச்சந்திரன் (வயது- 57) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று சனிக்கிழமை காலை மேற்படி குடும்பப் பெண்ணுக்கு சிறுநீர் அடைப்பு ஏற்பட்டதாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் ஈரல் பாதிப்படைந்து அதன்மூலம் கிருமித் தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,10,60)


மஹஜன சம்பத
திகதி 2024.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 5491
B 2 2 2 5 9 4
அத சம்பத
B 2 5 9 4
சீட்டிழுப்பு இலக்கம் 66
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1521
H 12 21 27 71 H
Double Chance 37942

மெகா பவர்
திகதி 01/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1839
Y 22 11 16 31 69
43697

லக்கி 7 VIP
திகதி 2024.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 317
B 8 2 5 2 2 5 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3733
சீட்டிழுப்பு திகதி 01.06.2024
Y 23 59 65 76
Y 13749

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 0800
மிதுனம் 20 37 41 44 மிதுனம்
56434 25


## துப்பாக்கி...

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் கண்ணையா அன்பழகன் என்ற 19 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## பஸ்...

எட்டினால் மட்டுமே பஸ் கட்டணத்தை குறைக்க முடியும் என அதன் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பஸ் கட்டண தேசிய கொள்கைகளுக்கு அமைய, 4 சதவீதமான எரிபொருள் குறைப்புக்கு மாத்திரமே கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ள முடியும் எனவும்,

டீசல் விலை 2.5 சதவீதமே குறைக்கப்பட்டுள்ளதால், பஸ் கட்டணங்களை குறைக்க முடியாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்ட போதிலும், தமது கட்டணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என முச்சக்கரவண்டி சங்கங்கள் தெரிவித்துள்ளன.

குறைக்கப்பட்ட பெற்றோல் விலையுடன் ஒப்பிடுகையில் போக்குவரத்து கட்டணத்தை குறைக்க முடியாது என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## எதிர்வரும்...

தொனிப்பொருளில் நேற்று முன்தினம் ஜனாதிபதி இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்னும் 15 வருடங்களில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் எவரும் ஆதரவளிக்க மாட்டார்கள் எனவும் இலங்கையின் எதிர்கால வெற்றிக்கு இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது எனவும் தெரிவித்தார். (ம-7,10)

## ஜனாதிபதித்...

பட்டன.

ஸ்ரீ லங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும் வரை ஜனாதிபதித்தேர்தலை பகிஷ்கரிப்போம் என்ற தொனிப்பொருளில் மக்களிடையே துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,10)

## குடும்பப் பெண்...

பிள்ளைகளின் தாயே மேற்படி நபரால் எரியூட்டப்பட்டுள்ளார்.

சம்பவத்தைப் பார்த்த ஊர் மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அப்பகுதிக்கு வந்த பொலிஸார் தீயை அணைத்து குறித்த பெண்ணை அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7,10)

## இந்தியாவில்...

ர்ணைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து எங்களின் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கையுடன் உள்ளனர்.

இந்தியாவிற்கு சென்ற நான்கு இலங்கையர்கள் குறித்து முழுமையான விசாரணைகள் இடம்பெறுகின்றன அவர்களின் சகாக்கள் கூட விசாரிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## மனித உரிமை...

தேசிய மனித உரிமைகள் அமைப்புக்கள் தொடர்பான ஆசிய அரச சார்பற்ற அமைப்புக்களின் வலையமைப்பின் செயலகமான மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய பேரவையினால் ஆசியப் பிராந்தியத்தின் தேசிய மனித உரிமைகள் அமைப்புக்களின் இயங்குகை தொடர்பான 2023ஆம் ஆண்டுக்கான அறிக்கை கடந்த வாரம் கொழும்பு, ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த ஆய்வறிக்கையில்,

இலங்கையில் 2021 - 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய கோவிட் - 19 பெருந்தொற்றுப் பரவல், அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி, "அரகலய" என அறியப்படும் மாபெரும் மக்கள் எழுச்சி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமா என்பன உள்ளடங்கலாக முக்கிய சம்பவங்கள் பற்றி விபரிக்கப்பட்டிருப்பதுடன், இவற்றினால் பொதுமக்கள் மீது ஏற்பட்ட தாக்கங்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கையாண்ட முறை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் சுயாதீனத்துவத்தை உறுதிசெய்தல், அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நீக்கி, 19 ஆவது திருத்தத்தை மீளக் கொண்டுவரல், ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடை முறைப்படுத்தாத அரச அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை ஆணைக்குழுவுக்கு வழங்கல், ஆணைக்குழுவுக்கு திறைசேரியினால் உரியவாறு நிதி விடுவிக்கப்படுவதை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,10)

# நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

## 740 பேர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, போதைப்பொருட்களுடன் 10 பெண் கள் உட்பட 740 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 34 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 6 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7,10)


உத்தியோகபூர்வ முடிவுகள்
01.06.2024 வெற்றி வாரம் 199 வர்ணம் நீலம்
K 2 4 5 5 0 0
30053 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,190,976.00
DLB

SUPER BALL
2465 நீலம் 01.06.2024 சனிக்கிழமை
25 34 44 45 V
94838
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,123,490.40

சனிதா
2024.06.01 வெற்றி வாரம் 4626
18 19 22 49 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,368,754.00
0 3 3 6 0

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4177 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.01 தினம் சனிக்கிழமை
01 04 42 58 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,632,153.60
725705

F 23 27 28 35 61
1641 சிவப்பு 01.06.2024 சனிக்கிழமை
871068
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 525,389,509.00

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2291
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2024.06.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 116,938,954.40
19 25 33 56 L
356885


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த 1994ம் ஆண்டு பூச நட்சத்திரத்தில் பிறந்த MSC கற்று ஜேர்மனியில் வேலை பார்க்கும் பெண்ணிற்கு ஜேர்மனியில் படித்து நல்ல வேலை பார்க்கும் நற்குணமுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

(1028)

**077 679 3797**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(861)

## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

(C-0507)

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-

**0777-068-777**
v2vacancies@gmail.com

## அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா?
உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக உள்ளோம்.

(C-0507)

**V2 TRAVELS 0768226244**

## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0507)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 268/= | |
| 1 Kg கோதுமை மா | - 174/= | |
| 5 Kg Prima கோதுமை மா | - 980/= | ~~1150/=~~ |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 405/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 180/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 750ml நல்லெண்ணை | - 1455/= | ~~1550/=~~ |
| 01 Supiri மீன் ரின் | - 450/= | ~~650/=~~ |
| 1Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 370/= | ~~450/=~~ |
| 500ml Vim Liquid | - 350/= | ~~425/=~~ |
| 1.5L Pepsi சோடா | - 340/= | ~~400/=~~ |
| 180ml Chik சம்போ | - 340/= | ~~480/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3600/= | ~~3900/=~~ |

400g Anchor
995/=
~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1062)

Happy Supermarket
**0777 8080 30**

## A/L PHYSICS CLASS

2024 பரீட்சை எழுத இருக்கும் மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. Y.M.C.A தம்பசிட்டி, பருத்தித்துறை S.C.K வேம்படி வீதி யாழ்ப்பாணம்

(1003)

**077 600 4896**

## விமலம் திருமண சேவை

யாழ்/ கனடா சர்வதேச சேவை தாங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கனடா. லண்டன். சுவிஸ். பிரான்ஸ் மணமகன் / மணமகள் உள்ளன.

(779)

+1437 244 6737, +1647 657 1347
(கனடா) 077 240 9276 தாயகம்

## பிரத்தியேக வகுப்புக்கள்

பொருளியல் க.பொ.த உயர்தரம், குடியியற்கல்வி க.பொ.த சாதாரண தரம் தனியாகவோ குழுவாகவோ வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

(1001)

**077 900 7597**
**077 906 4595**

## பகுதி நேர பராமரிப்பாளர் தேவை

கோண்டாவில் பகுதியில் வசிக்கும் வயோதிப அம்மா ஒருவரை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.

(C-0502)

**077 686 7485**

People's Commission on Pandemic Justice and Right to Health

LAW & SOCIETY TRUST

# மக்களுக்கான பொது விசாரணை
# உங்களது கருத்துக்களை வரவேற்கின்றோம்

**கோவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில்....**
உங்கள் சுகாதார உரிமைகளில் அநீதி இழைக்கப்பட்டதா?
உங்களிடம் மறக்கமுடியாத அனுபவம் உள்ளதா?

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தினால் (LST) நிறுவப்பட்ட தொற்றுநோய்க்கால நீதி மற்றும் ஆரோக்கியத்திற்கான உரிமைகள் தொடர்பான மக்கள் ஆணையம், மக்களின் ஆரோக்கியத்திற்கான உரிமைகளை பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு உங்களது கருத்துக்களைக் கேட்க உங்களை நாடி வருகின்றோம்...

எதிர்கால தொற்றுநோய்க்கான தயார்நிலைக்கும்...
சமூகத்தில் பாகுபாடுகள் இல்லாமல், அனைவரினதும் ஆரோக்கியத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தவும்....
உங்கள் விலைமதிப்பற்ற அனுபவங்களும் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

**திகதி: 8 ஆம் திகதி ஜூன் மாதம் 2024 (சனிக்கிழமை)**
**நேரம்: 9.00 மு.ப - 3.00 பி.ப**
**இடம்: சர்வோதய மண்டபம், யாழ்ப்பாணம் (568 கண்டி வீதி, யாழ்ப்பாணம் 40000)**

உங்களது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும் ஆரோக்கியத்திற்கான உரிமை பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கவும் உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். அனைவரினதும் ஆரோக்கியத்திற்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு உங்கள் குரலை எழுப்புங்கள்!

*0112691228*
*03 கின்ஸி டெரஸ், கொழும்பு 8*
*PCPJ.CONTACT@GMAIL.COM*

(C-0506)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org